பக்கங்கள்: பதினான்கு

யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 27 சனிக்கிழமை (10-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:165

# சதீஷ் நம்பியாரின் அறிக்கை குறித்து தமிழ்க் கட்சிகள் அதிருப்தி, கண்டனம்

## யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் தயாரிக்கப்பட்டது; பக்கச்சார்பானது; குப்பையில் வீசவேண்டியது எனக் கருத்து

கொழும்பு,மே10

**இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியமர்வதற்குத் தடையாக இருக்கும் உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றி இந்திய முன்னாள் இராணுவ உயர் அதிகாரி லெப்ரினன்ட் ஜெனரல் சதீஷ் நம்பியார், அரசுக்குச் சமர்ப்பித்த அறிக்கை குறித்து தமிழ்க் கட்சிகள் அதிருப்தியும் கண்டனமும் தெரிவித்துள்ளன.**

**இந்த அறிக்கை யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு பக்கச்சார்பானது; குப்பைத்தொட்டியில் போடவேண்டியது என்று தமிழ்க்கட்சிகள் கருத்துக் கூறின.**

அறிக்கையைப்பற்றி தமிழ்க் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பியும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்ததாவது:-

இது இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியமர்த்துவது சம்பந்தமான மனிதாபிமான விடயம்; அரசியல் பிரச்சினை. இதற்கு அரசியல் தீர்வே காண வேண்டும். இதில் இராணுவ அதிகாரிக்கு இடமில்லை. அரசும் புலிகளும் பேசித்தான் இதற்குத் தீர்வுகாண வேண்டும்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து அல்லது பாதுகாப்பு முன் அரங்கில் இருந்து படைகள் விலகுவதானால் அதேநேரத்தில் புலிகளும் தமது இராணுவ நடவடிக்கை நிலைகளில் இருந்து விலகிக்கொள்ளவேண்டும். அதற்கு சமாதானப் பேச்சு மேசையில் இணக்கம் காணப்பட வேண்டும் என்று சதீஷ் நம்பியார் கூறு கிறார்.

அதன்மூலம், இது பேச்சுமூலம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழு கருத்து

கொழும்பு,மே10

கண்காணிப்புக்குழு மேலும் வலுவாக்கப்படவேண்டும் என்பது இப்போதைய கவலையல்ல.

யுத்தநிறுத்த உடன்படிக்கை இரு தரப்பினராலும் மேலும் முறையாகக் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதே இப்போதைய கவலை.

சதீஷ் நம்பியாரின் அறிக்கை தொடர்பாக இப்படிக் கூறியிருக்கிறார் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் டொக் கெல்சன்.

சதீஷ் நம்பியாரின் அறிக்கை குறித்து பி.பி.ஸி. தமிழோசைக்கு டொக் கெல்சன் அளித்த செவ்வியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

*கேள்வி:-* கண்காணிப்புக் குழுவின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளும இதில் சேர்க்கப்படவேண்டும் என்ற நம்பியாரின் ஆலோசனை குறித்து உங்களது கருத்து என்ன?

*பதில்:-* கண்காணிப்புக் குழுவில் இப்போது அங்கம் வகிக்கும் நாடுகளை விட மற்றைய நாடுகளைச் சேர்க்க வேண்டும் என்பது ஒன்றும் புதிய யோசனை அல்ல. உண்மையைச் சொல்வதானால் இப்போது இருக்கும முக்கியமான கவலை, கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் என்பதோ, கண்காணிப்புக் குழுவினரின் அதிகாரத்தை அதிகரிக்க வேண்டும் என்பதோ அல்ல. யுத்தநிறுத்த உடன்பாடு அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினராலும் முறை

(14ஆம் பக்கம் பார்க்க)

## எமது பிரச்சினைக்கு அரசு அந்நியர்களை அழைத்து ஆலோசனை கோருகிறது

### பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளர் குற்றச்சாட்டு

கொழும்பு,மே10

இந்தியாவின் முன்னாள் இராணுவ உயரதிகாரி சதீஷ் நம்பியாரின் முதலாவது அறிக்கை ஒரு சில தினங்களுக்கு முன் ஜனாதிபதிக்கு கிடைத்தது. நேற்று இரண்டாவது அறிக்கையும் கையளிக்கப்பட்டது. எமது பிரச்சினைகளை ஆராய அரசு அந்நியர்களை அழைத்து ஆலோசனை கோருகிறது என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போது இவற்றைத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:-

சதீஷ் நம்பியாரையும், கடல் வலயம் தொடர்பாக ஆராய வந்திருக்கும் ஜெக்கப்பையும் இந்திய அரசின் பிரதிநிதிகள் போல் காட்ட அரசு முற்படுகின்றது. ஆனால், அவர்கள் இந்திய அரசின் பிரதிநிதிகள் அல்லர் என்பதே உண்மை.

சதீஷ் நம்பியாரின் முதலாவது அறிக்கையில் அரசிற்கு சில சங்கடங்கள் இருந்ததனால் அதற்கு அரசு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கடந்த சில தினங்களுக்கு முன் பிரதமருக்கு ஜனாதிபதி கடிதம் அனுப்பியே அந்த அறிக்கையைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பதில் ஓரிரு தினங்களில்

கிளிநொச்சி,மே10

அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இந்திய இராணுவ நிபுணர் சதீஷ் நம்பியார் அரசுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கை தொடர்பான தமது நிலைப்பாட்டை ஓரிரு தினங்களில் விடுதலைப் புலிகள் வெளியிடுவர்.

விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் மேற்கண்டவாறு தகவல் தெரிவித்தனர்.

சதீஷ் நம்பியாரின் அறிக்கை அரசிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த அறிகை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை தொடர்பாக ஜனாதிபதி பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆராய்ந்து வருவதாகக் கூறப்பட்டது.

இந்த அறிக்கையை விடுதலைப் புலிகளின் தலைமையும் விரிவாக ஆராய்ந்து வருகின்றது என்றும் - ஓரிரு தினங்களில் தமது தரப்பு நிலைப்பாடு வெளியிடப்படும் என்றும் - புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம-3)

## அமைதிப் பேச்சு நடத்துவதற்கு இடமளிக்க மாலைதீவு தயார்!

### அந்நாட்டு ஜனாதிபதி அப்துல் கயூம் தெரிவிப்பு

கொழும்பு,மே10

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தரப்பினர் பேச்சுக்களை மாலைதீவில் நடத்த வேண்டும் என்று கோரினால் அது குறித்து நாம் சிறந்த முறையில் பிரதிபலிப்பைக் காட்டுவோம்.

- இவ்வாறு கூறியிருக்கிறார் மாலைதீவு ஜனாதிபதி மௌமூன் அப்துல் கயூம்.

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு தாயகம் திரும்பும் முன் நேற்று தாம் கலந்துகொண்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை அரசுக்கும், ஜனாதிபதிக்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

இலங்கையின் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமான நாளிலேயே அவற்றை எமது நாட்டில் நடத்தும் நடவடிக்கைக்கு தயாராக இருப்பதாக நாம் அறிவித்திருந்தோம்.

மாலைதீவுக்கும் இலங்கைக்கும இடையில் நிலவும் சமூக. பொருளாதார.

(14ஆம் பக்கம் பார்க்க)



வன்னியில் செயற்பட்டுவரும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினால் 60 பேர் கொண்ட நான்கு புதிய அணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. சர்வதேச தரத்தில் விசேட பயிற்சிகள் இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. நோர்வே மக்கள் உதவி நிறுவனத்தினரால் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. பயிற்சியை முடித்தவர்களுக்கான சான்றிதழ்கள் நேற்று வழங்கப்பட்டன. அந்த நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படம் இது.

## ஜப்பான் மாநாட்டில் புலிகள் பங்குபற்றுவர் அந்த நாட்டுத் தூதர் அகாஷி நம்பிக்கை!

கொழும்பு,மே10

ஜப்பானில் நடைபெற இருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவார்கள் என்று தாம் நம்புவதாக இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி நம்பிக்கை தெரிவித்துள்ளார். அவர்கள் கலந்துகொண்டால்தான் இலங்கைக்கு அதிக நிதி உதவிகள் கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

ஹில்டன் ஹோட்டலில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் நாடுகள் தாம் எவ்வளவு நிதியை வழங்கவுள்ளோம் என்பது பற்றி இது வரை தெரிவிக்கவில்லை. சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்தே பெரும்பாலான நாடுகள் கவனம் செலுத்துகின்றன. பேச்சுக்களின் முன்னேற்றத்தைப் பொறுத்தே நாடுகள் வழங்கும் உதவித் தொகை அமையும்.

எது எப்படியாயினும் குறித்த திகதியில் உதவி வழங்கும் மாநாடு நடைபெறும்.

அதில் விடுதலைப் புலிகள் பங்குகொள்வார்கள் என்று நாம் நம்புகின்றோம். அவர்கள் பங்கு கொள்ளும் பட்சத்தில் இலங்கைக்கு அதிகூடிய நிதி உதவிகள் கிட்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அங்கு கிடைக்கும் நிதி உதவிகள் உரிய இடத்தைச் சென்றடைய வேண்டும். வடக்கு - கிழக்கில் மீள் கட்டமைப்புப் பணிகள் மற்றும் மீள் குடியேற்றங்கள் ஆகியவற்றுக்கு நிறையப் பணம் தேவைப்படும்.

நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பணத்தேவை இருக்கிறது. அதனால், அரசும் புலிகளும் மாநாட்டில் கலந்து கொள்வது அவசியமாகிறது. இப்படி அகாஷி கூறினார்.

கேள்வி ஒன்றுக்கு அவர் பதிலளிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# யாழ். பிராந்திய இந்து மாநாடு எழுச்சியுடன் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே10

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு இந்து கலாசார அமைச்சு யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்திருந்த பிராந்திய இந்து மாநாடு நேற்று நல்லூரில் எழுச்சிபூர்வமாக ஆரம்பமானது.

திருநெல்வேலி சிவன் கோயிலில் விசேட பூசை, வழிபாடுகளை அடுத்து இடம்பெற்ற எழுச்சி ஊர்வலத்துடன் பிராந்திய மாநாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. ஊர்வலத்தின் முன்னே யானை ஒன்றும் சென்றது.

சிவாச்சாரியார்கள் பிராந்திய மாநாட்டுப் பதாகைகள் மற்றும் நந்திக் கொடிகளைத் தாங்கிச்செல்ல சமயக் குரவர்கள் நால்வரின் திருவுருவப் படங்கள் தாங்கிய ஊர்தி நகர்ந்தது. அதன் பின்னே இந்துப் பெரியார்கள், இந்து நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த சிறுவர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், கல்வியியற் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக் கணக்கானோர் அணிவகுத்துச்சென்றனர்.

திருநெல்வேலி சிவன் கோயிலில் இருந்து ஆரம்பமான எழுச்சி ஊர்வலம் பரமேஸ்வராச் சந்தியூடாக பலாலி வீதியை அடைந்து, அங்கிருந்து கந்தர்மடச் சந்தி - அரசடி வீதி வழியாக நல்லை ஆதீனத்தைச் சென்றடைந்தது.

நல்லை ஆதீன முன்றிலில் மாநாட்டுக் கொடியினை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஏற்றிவைத்தார்.

முற்பகல் 9.30 மணிக்கு யாழ்பல்கலைக்கழக கலைப் பீடாதிபதியும் உலக இந்து மாநாட்டு யாழ். பிராந்தியக் குழுத் தலைவருமான பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிராந்திய மாநாட்டை ஆரம்பித்து வைத்து சிறப்புரையாற்றினார். யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, நல்லைக் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

தொடர்ந்து திருமுறை அரங்கு, இளைஞர் அரங்கு, கவியரங்கு, பண்ணிசைக் கச்சேரி மற்றும் நாடகம் என்பனவும் இடம்பெற்றன.

இந்து சமய பிராந்திய மாநாட்டையொட்டி நல்லைக் கந்தன் ஆலயப் பிரதேசம் மகர தோரணங்கள், வாழைகள் மற்றும் நந்திக் கொடிகள் என்பவற்றால் அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம் பூண்டிருந்தது.

குடாநாடு முழுவதும் ஆலயங்களிலும் பொது இடங்கிலும் வாழைகள், தோரணங்கள் கட்டப்பட்டு இந்து மாநாட்டு எழுச்சியைக் காணக்கூடியதாக இருந்தது. பிராந்திய மாநாட்டு நிகழ்வுகள் தொடர்ந்து இன்று நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெறும். (ம-5-12-86-10-15)

## இந்து மாநாட்டு நிகழ்வுகள்



அமைச்சர் மற்றும் சமயப் பெரியோர்கள் முன்னணியில் வர இந்து மாநாட்டு ஊர்வலம் நல்லை ஆதீனம் நோக்கி செல்கின்றது.



ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்ட சமயக் குரவர்கள் நால்வரதும் திருவுருவப் படங்கள்.



நல்லை ஆதீனத்தில் மாநாட்டு ஆரம்பமாக பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் குத்துவிளக்கு ஏற்றுவதையும் அருகில் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர் மோகனதாஸ், நல்லை ஆதீன முதல்வர் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (படங்கள் : வசந்த்)

# அமைச்சர் மகேஸ்வரன் 'உதயன்' மீது பாய்ச்சல்!

யாழ்ப்பாணம்,மே10

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் 'உதயன்', 'சுடர் ஒளி' நாளிதழ்களைப் பெயர் குறிப்பிடாமல் அவற்றின் மீது பாய்ச்சல் நடத்தியிருக்கின்றார்.

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு நேற்று யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்தில் ஆரம்பமான பிராந்திய மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு பத்திரிகைகள் குறித்து அவர் கூறியதாவது:-

பத்திரிகையாளர்கள் தம்மைத்தாமே விற்றுப் பிழைக்கின்றார்கள். அவர்கள் தம்மை மறந்து - தமது மதத்தை மறந்து - பத்திரிகையின் விற்பனைக்காக உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுகின்றார்கள்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு பத்திரிகையொன்றில், முன்னர் இந்தியாவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிரேமானந்தா சுவாமிகளுடைய பாலியல் குற்றச்சாட்டு வழக்கையும், கைதடி சைவச் சிறுவர் இல்லப் பொறுப்பாளர் சக்திகிரீவனின் வழக்கையும் ஒப்பிட்டு எழுதப்பட்டிருந்தது.

செய்தித்தாள்களை விற்று, லாபம் ஈட்டித் தம்மை பிரபல்யம் அடையச் செய்ய எண்ணும் பத்திரிகைகளின் பொறுப்பற்ற செயல்களே இவை.

இத்தகைய செய்திகளை வெளியிடும் பத்திரிகையாளர்கள் ஒன்றை மறந்து விடுகின்றார்கள். அவர்கள் தம்மைத்தாமே அழித்துக் கொள்கின்றார்கள்.

நாம் பிறக்கும்போது இறைவனால் இம்மதத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றோம் என்பதை நினைத்துப் பார்க்காத நிலையே இன்று காணப்படுகின்றது.

என்னுடைய நண்பர்கள் இந்தப் பத்திரிகையை வெளியிடுகின்றார்கள். இந்தச் செய்தியை அவர்கள் வெளியிட்டதனை அடுத்து, அவர்களின் தொடர்பினை நான் துண்டித்துவிட்டேன்.

அவர்களுடைய தொடர்பு எங்களுக்குத் தேவையில்லை. அவர்கள் தமது மதத்தினை வீற்றுப்பிழைக்கும் இனமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

என்னைப்பற்றி எத்தனை விமர்சனங்களை எழுதினாலும் அதுபற்றி நான் கவலைப்படப் போவதில்லை. எங்களுடைய மதத்தை இழிவுபடுத்துகின்ற 'உன்னை' நான் நேசிப்பதற்குத் தயாராயில்லை. 'உன்னை' இழிவுபடுத்துவதற்கு நாங்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றோம் எனச் செய்தியாளர்களிடம் கூறியிருக்கின்றேன்.

- என்றார் அமைச்சர் மகேஸ்வரன். (ம-12)

## நோர்வே வெளிவிவகார அமைச்சர் 14ஆம் திகதி இலங்கை வருகிறார்

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீட்டர்ஸன் எதிர்வரும் 14ஆம் திகதி இலங்கை வருகிறார். இடைநிறுத்தப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாவதை உறுதிப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவதே அவரது இவ் விஜயத்தின் நோக்கமாகும்.நோர்வே அமைச்சர் இரண்டு நாள்கள் இலங்கையில் தங்கியிருப்பார். கொழும்பில் அரசுத் தலைவர்களுடன் பேச்சு நடத்தும் அவர், கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் சந்திப்பார்.

# செந்தமிழை காத்துப் போற்றிட வந்த 'உலகம் பரவிய தமிழின் வேர்: கல்'

பேராசிரியர் முனைவர் கு.அரசேந்திரன் எழுதிய 'உலகம் பரவிய தமிழின் வேர்: கல்' என்ற நூலின் அறிமுக விழா இன்று வன்னியில் இடம்பெறுகின்றது. அதனையொட்டி இந்த ஆக்கம் வெளியிடப்படுகின்றது.

தொல்லியல் ஆய்வினூடாக இழக்கப்பட்ட - மறைக்கப்பட்ட நாகரிகங்களை, வரலாற்றுப் பெருமைகளை தொல்லியல் ஆய்வாளர்கள் மீட்டெடுத்து வெளிக்கொணர்வது போன்று வழக்கிழந்து மறைந்துபோன சொற்களிற பலவற்றை வேர்ச்சொல் ஆய்வினூடாக சொலாய்வாளர்கள் மீட்டு வெளிக்கொணர்கின்றனர்.

2000 ஆண்டுகளுக்கு முன்னர் வரை எமது முன்னோர்கள் எமக்கென ஆக்கிவைத்திருந்த பல்லாயிரக்கணக்கான சொற்கள் அடங்கிய சொற்களஞ்சியத்தில் உள்ள சொற்கள் பலவற்றை பயன்படுத்தாதலால் எமது சொற்செலவம் குறைந்தது மட்டுமன்றி, எம்மவர்கள் காலத்தின் தேவைக்கான புதிய சொற்களை ஆக்காது பிறமொழிகளில் சொற்களைக் கடன் வாங்கி பயன்படுத்தியமையால் பிற்காலத்திலே தோன்றிய மொழிகளுக்கெல்லாம் வழிவிட்டு உலகின் உயர் தனி செம்மொழியாகத் திகழ்ந்த எம் மொழி தாழ்ந்திருக்கும் நிலை ஏற்பட்டது. பிறமொழிச் சொல் ஊடுருவல்களினால் மொழிச் சிதைவுகள் ஏற்பட்டு பல கிளை மொழிகள் உருவாகின.

சொலாய்வாளர்கள் ஒரு சிலர் வேர்ச்சொல் ஆய்வுகளினூடாக இழந்த எமது பழந்தமிழ்ச் சொற்கள் பலவற்றை மீட்டு எடுத்ததோடு, தேவைக்கேற்ப புதிய சொற்களையும் ஆக்கி வழங்கி வருவதனால் எமது மொழி முற்றிலும் அழிந்து சிதையாது பேணப்பட்டு வருகிறது.

ஆயினும், தமிழ் நிலத்தில் சொல் ஆய்வாளர்களுக்கு மொழி வல்லுநர்களுக்கு ஆக்கமோ ஊக்கமோ வரவேற்போ வழங்கப்படாதது மட்டுமன்றி, அவர்களது உழைப்பையும் பணியையும் இகழ்வதும் இழிவுபடுத்துவதும் தொடர்ந்துகொண்டு இருக்கின்றன.

"மண்ணை மீட்கும் விடுதலைப் போராளிகள் போன்றே சொல்லை, மொழியை மீட்பவர்களும் போராளிகள் ஆவர். அதனால்தான் சொல்லாய்வில் ஈடுபட்டு எமது மொழியைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் சொல்லாய்வாளர் முனைவர் கு.அரசேந்திரனை, அவரது நூலுக்கெழுதிய பாயிரத்தில் எமது உணர்ச்சிப்பாவலர் காசியானந்தன் "மொத்தி எழுதும மொழிப் போராளி" எனப் பாராட்டியுள்ளார்.

அந்த மொழிப் போராளி 'உலகம் தழுவிய தமிழின் வேர்: கல்' என்ற ஆய்வு நூலின் இருபாகங்களை "தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தன மேனியரான" எம் மாவீர்களுக்கு படையளாக்கியுள்ளார். அதனுடன் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனின் வாழ்த்துரை, ம.தி.மு.க. செயலாளர் வை.கோவினது பாராட்டுரை, உணர்ச்சிப் பாவலர் காசியானந்தனின் பாயிரம் என்பவற்றோடு தனது ஆய்வுரை நூலை அரங்கேற்றியுள்ளார்.

அதுமட்டுமன்றி, அந்நூலில் தாயக மண் மீட்புப் போரை வீறோடு நடத்திவரும் எமது தேசியத் தலைவர் அவர்கள் பற்றி முனைவர் கு.அரசேந்திரன் எடுத்துக்கூறத் தவறவில்லை. அதில் அவர் "சூடும் சுரணையும் உள்ள சில நூறு பேர் கண்ணீர் விட்டு கதறுபவர்களாக தமிழகத்தில் தேம்பித் திரியும் நிலையில் தமிழினம், உருக்கொண்டு கருக்கொண்ட மூல நிலமாம் குமரிக் கண்டத்தின் எஞ்சிய துண்டுக் காணியாய் கடலில் மிதக்கும் தமிழீழத்தில் உலகின் மறுசுழற்சிக்கான அடிக்கோள் நடப்பட்டுவிட்டது.

"வந்தேறிய சிங்கள ஆரியக் குற்றினத்தால் தமிழீழத் தமிழினம் அல்லலில் உழன்றாலும், மீண்டும் மாண்ட பெருமையை மீட்டும் வல்லமையில் அதன் தேசியத் தலைவரால் உலகின் புருவங்கள் உயர இன்று கிழர்ந்தெழுந்து நிற்கின்றது" - என்ற உண்மையை எடுத்துக் கூறியதுடன் நின்றுவிடாது "இநத இனத்துக்கொரு தலைவரை இயற்கை வழங்கி பெருமூச்சு விட்டிருக்கிறது. அந்தத் தலைவர் கழுத்தில் மாலைகள் விழும். அந்த நாளிலே தமிழ்த்தாய் கண்ணீரை நிறுத்தி மீண்டும் கண்ணீரைச் சொரிவாள். அது மகிழ்ச்சிக் கண்ணீராக இருக்கும். அந்நாளின் பின் உலகம் தமிழ் மொழியின் மூலம் எது என்பதைத் தேடித் திரும்பும்" - எனத் தமிழீழத்தின் விடிவின் பின்னரே, எமது தலைவரின் வெற்றியின் பின்னரே தமிழின விடிவு வரும் என்பதை வெளிப்படுத்துகின்றார்.

தமிழின உரிமை மீட்புக்காக விடுதலைப் போராளியாக வர வேண்டும் என்று தொடக்க காலத்தில் விரிந்த அவரது எண்ணச்சிறகுகள் காலச் சூழலால், தமிழ் மொழியை மீட்கக்கூடிய மொழிப் போராளியாக அவரை எமக்குத் தந்திருக்கின்றது. 1984 இல் அவர் படைத்த 'காலடிதாள்' சொல்வரலாற்று நூலுக்கு அன்றைய தமிழக அரசு பரிசை வழங்கியதானது அவரைச் சொல் ஆராய்ச்சியில் ஆர்வத்தோடு தொடர்ந்து ஈடுபட வைத்தது எனலாம்.

முனைவர் கு. அரசேந்திரன் வேரின் மூலங்கள் கலந்துள்ள உலக மொழிகளை எல்லாம் வெளிப்படுத்தி எமது மொழிக்கு ஏற்றத்தையும் பெருமையையும் தந்துள்ளார்.

ஆரியர் இந்தியாவுக்கு நுழைவதற்கு முன்னர் இந்தியா முழுவதும் திராவிடரே பரவியிருந்தனர் என்ற வரலாற்று உண்மையை நேரு அவர்கள் சிறையிலிருந்து மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். முனைவர் கு.அரசேந்திரன் இமயம், காசுமீரம் என்னும் இடப்பெயர்கள்கூட தமிழ்ச சொற்களே என அடுக்கடுக்கான பல்வேறு சான்றுகளோடு இந்நூலில் நிறுவியிருக்கின்றார்.

**வெ.இளங்குமரன்**
**பொறுப்பாளர்,**
**தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழீழம்**

கடந்த 2000ஆண்டு காலத்தில் ஆரியத்தின் கலப்பால் தமிழ் நாட்டின பெரும் பகுதியை இழந்துவிட்ட நிலையில் தமிழ் நாடு என பெயர் சூடியதன் பின்னர் தமிழகம் திராவிடக் கட்சிகளின் பொறுப்பின்மையால் ஆங்கிலம் பரவிக் கலந்து 'தமிங்கில' நாடாக மாறிவருவதையிட்டு முனைவர் கு.அரசேந்திரன் தனது மனக்கலக்கத்தை இந்நூலில் வெளிப்படுத்தியிருக்கிறார். தமிழ் அழிந்து வரும் நிலையையிட்டு என்றுமில்லாத அளவு கும்மாள மகிழ்ச்சியிலே திழைத்திருக்கும் பிறவித் தமிழ் பகைவருக்கு இன்று இடியாகத் தெரிவது தென்திசை என்றும் அத் தென்திசை இனப் பகைவருக்கு இயமன் திசை என்றும் அத்திசையில் வெடிக்கும் வெடிப்பை உலகம் பார்த்து வியந்து வெகுண்டு நிற்கின்றது என்றும் அதைப் பார்த்து தமிழ நாட்டுதமிழரும் ஆர்த்தெழுந்து போர் பரணியை முன்னெடுக்கும் நாள் விரைவில் வெளிவரும் என்றும் முனைவர் கு.அரசேந்திரன் ஆறுதல் கொள்கின்றார்.

தமிழின ஏற்றத்தின் ஏணியாக அமைந்துள்ள 'உலகம் பரவிய தமிழின் வேர்: கல்' என்ற ஆய்வு நூலை வாங்கிப் பயன்படுத்தி நாமும் ஏற்றமுறுவதுடன் மொழிப் போராளியின் தமிழ்ச்சொல் மீட்புப் பணிக்கும் ஊக்கம் கொடுப்போம். ★



உ

மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்



## இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன்
## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்
### நடத்தும்

# 2ஆவது உலக இந்து மாநாட்டின் மாபெரும் விழா

**இடம் : சாவகச்சேரி இந்துக் கல்லூரி திறந்த வெளி அரங்கம்**
**காலம் : இன்று (10.05.2003) சனிக்கிழமை பிற்பகல் 5 மணி**

## நிகழ்ச்சிகள்

திருமுறைகள் கையளித்தல்:
(சங்கத்தானை கந்தசுவாமி கோயிலிலிருந்து எடுத்துவரப்பட்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூலகத்திற்கு கையளித்தல்)

மங்கள விளக்கேற்றல்:

வரவேற்புரை:
**டாக்டர் சு.சி.அருளானந்தம் அவர்கள்**

திருமுறை முற்றோதலும் பண்ணிசையும்
**செல்வன் சுப்பிரமணியம் ஸ்ரீவரன்**

ஆசியுரை:

தலைமையுரை:
**திரு.பீ.என்.சற்குணராசா**
*(தலைவர், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்)*

பிரதமவிருந்தினர் உரை:
**திரு.தி.மகேஸ்வரன்**
(கௌரவ இந்து கலாசார அமைச்சர்)

சிறப்புரை:
**திரு.க.கேதீஸ்வரன்**
*(பிரதேச செயலர், தென்மராட்சி)*

சிறப்புச் சொற்பொழிவு
தமிழக அறிஞர் முனைவர்
**இரா.செல்வக்கணபதி அவர்கள்**
*(தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளர்)*

**டாக்டர் A.மலர் அவர்கள்** (அன்பே சிவம்)
*தமிழகத்தின் பேச்சாளர் (கோவை)*

**டாக்டர் திலகதி சண்முகசுந்தரம்**
இல்வாழ்வும் இந்து மதமும்

**திருமதி லலிதா சுந்தரம்**
திருக்குறளும் கலைகளும்

தமிழகத்தின் முன்னணி நிகழ்ச்சிகளில் முதன்மைபெற்று நிற்கின்ற நாதஸ்வர இசையோடு தவில் கச்சேரியும் இணைந்து இசை மழைபொழிய
**திரு.A.L பழனிவேல் குழுவினர்** இணைந்து வழங்கும்
**மாபெரும் இசை நிகழ்ச்சி**
**தித்திக்கும் தில்லானா**
(இருபத்தைந்து பேர் இணைந்து வழங்கும் உன்னத நிகழ்ச்சி)

நன்றியுரை
**திரு. வி.கே.தவராசா**
*(செயலாளர், கைத்தொழில் வணிகர் மன்றம்)*

நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளர்
**திரு.ச.இளங்கோ**
*(பொருளாளர், கைத்தொழில் வணிகர் மன்றம்)*

**விசேட ஒலி, ஒளி அமைப்புக்கள், போக்குவரத்து வசதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.**

★ தென்மராட்சி இந்து ஆலயங்களுக்கான புனரமைப்புக்கான காசோலைகள் அமைச்சரினால் அன்றைய தினம் வழங்கப்படும்.
★ தென்மராட்சி பிரதேசத்தை சேர்ந்த அந்தண சிவாச்சாரியர்களையும், ஆலய தர்மகர்த்தாக்கள், நிர்வாகிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
★ தென்மராட்சிக்குட்பட்ட வணிகர் மன்றங்களின் நிர்வாகிகளையும், உறுப்பினர்களையும் அன்புடன் வரவேற்கின்றோம்.
★ தென்மராட்சிக்குட்பட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தென்னகத்தின் தலைசிறந்த நிகழ்ச்சியை காண்பதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம் ஆசனங்களுக்கு முந்துங்கள்!
முற்றிலும் இலவசமான நிகழ்வு அனைவரையும் திரண்டு வந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**விழாக் குழுக்கள்,**
**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

## மாநாடு சிறப்படைய வாழ்த்துபவர்கள்

| | |
|---|---|
| **விக்கினேஸ்வரா களஞ்சியம்**<br>கண்டி வீதி, சாவகச்சேரி | **ஐங்கரன் வெதுப்பகம், சிவகாமி தொலைத் தொடர்பு**<br>டச் வீதி, சாவகச்சேரி |
| **குமரன் ரேடர்ஸ்**<br>கண்டி வீதி, சாவகச்சேரி | **வாணி ரெக்ஸ்**<br>நவீன சந்தை, சாவகச்சேரி |
| **பிள்ளையார் களஞ்சியம்**<br>கண்டி வீதி, சாவகச்சேரி | **பிரகாஸ் மின் ஒட்டுத் தொழிலகம்**<br>புகையிரத நிலைய வீதி. சாவகச்சேரி |
| **அபான்ஸ் காட்சி அறை**<br>மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் | **அன்னை நாகா பூட் சிற்றி**<br>கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| **கதிரவன் இரும்பகம்**<br>கண்டி வீதி, சாவகச்சேரி | **பைந்தமிழ்**<br>சாவகச்சேரி |

(C/27837)

# புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சு

## நோராட் நிதியுதவியுடனான
## யாழ்ப்பாண நீர்ப்பாதுகாப்பு சுற்றுச்சூழல் திட்டம்

# ஆலோசகர்களுக்கும் உதவி அலுவலர்களுக்குமான பதவிகள்

கீழ்க்காணும் பதவிகளுக்கு தகுந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மேற்குறிப்பிட்ட திட்டத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்திட்டம் புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற 3 வருடத் திட்டமாகும். ஆரம்பத்தில் இந்நியமனம் ஒரு வருட காலத்திற்கு வழங்கப்பட்டு நிறைவேற்றுதலை அடிப்படையாக வைத்து மேலும் பதவிக்காலம் நீடிக்கப்படும். குறிப்பிட்ட பதவிகளுக்கான தேவைப்படும் தகைமைகளும், அனுபவங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

**1. பொறியியல் ஆலோசகர்**

*தகைமை* : கட்டட நிர்மாணக்கலையில் பட்டப்படிப்பினையும் நீர்வளத்திலும் நீர்ப்பாச்ன முகாமைத்துவத்திலும் பட்டப்பின்படிப்பினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நன்கு பேச எழுதத் தெரிந்தவராக இருத்தல்வேண்டும்.

*அனுபவம்* : ஏற்று நீர்ப்பாசன அமைப்புகளை வடிவமைத்தலிலும் நிர்மாணித்தலிலும் 25 வருட அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும். வெளிக்கள ஆலோசகத்துறையில் 10 வருட அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும். விழிப்புத் திட்டம், கருத்தரங்கு, பட்டறை என்பனவற்றை தமிழிலும், ஆங்கிலத்திலும் நடத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

*இடம்* : கொழும்பு வேலைத்தளமாக இருந்தபோதும் யாழ்ப்பாணத்திலும் வேலைசெய்யக் கூடியவராக இருத்தல்வேண்டும்.

*சம்பளம்* : கலந்துரையாடித் தீர்மானிக்கப்படும்.

**2. திட்ட ஆலோசகர் பதவி**
*முகாமைத்துவமும் திட்டமிடலும்*

*தகைமை* : முகாமைத்துவம், பொருளாதார, சமூகவியல் அல்லது குறித்த திட்டம் தொடர்பான பட்டப்படிப்பினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
தமிழ் மற்றும் ஆங்கிலம் நன்கு பேச, எழுதத் தெரிந்தவராக இருந்தல்வேண்டும்.

*அனுபவம்* : சிரேஷ்ட முகாமைத்துவ பதவியில் 25 வருட அனுபவமும், செயற்றிட்ட திட்டமிடலில் அனுபவமும் முக்கியமானதாகும். ஆலோசக களத்துறையில் 10 வருட அனுபவமுடையராயிருத்தல் வேண்டும்.
அரசாங்க திணைக்களங்கள் நேர்அமைச்சுகள், வடக்கு - கிழக்கு மாகாணசபை, யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர், அத்துடன் நோராட் போன்ற ஏனைய வெளிஉதவி வழங்குகின்ற அமைப்புகளுடன் நல்லுறவு கொண்டிருப்பதுடன் தொடர்புகொள்ளக் கூடியவராயுமிருத்தல் வேண்டும்.
சமூக தொடர்பாடல் திட்டங்களில் போதியளவு அனுபவமுடையவராயிருத்தல்வேண்டும்.
ஆய்வுமுறை பற்றிய அறிவுடன், நீர்ப்பாவனை, சுற்றுச்சூழல் சுகாதாரம் கைத்தொழில் பாவனை சம்பந்தமாக ஒழுங்குமுறை பற்றி அறிவு அனுகூலமாகக் கருதப்படும்.

*இடம்* : கொழும்பு வேலைத்தளமாக இருந்தபோதும் யாழ்ப்பாணத்திலும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல்வேண்டும்.

*சம்பளம்* : கலந்துரையாடித் தீர்மானிக்கப்படும்.

**3. அபிவிருத்தி பொருளியலாளர் பதவி**

*தகைமை* : பொருளியலில் பட்டப்படிப்புடன் பட்டப்பின்படிப்பினையும் கொண்டிருத்தல்வேண்டும்.

*அனுபவம்* : சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் 25வருட அனுபவமும் வெளிக்கள ஆலோசகர் துறையில் 10 வருட அனுபவமும், அரசாங்க திணைக்களங்கள், நீர்ப்பாவனை சேமிப்பில் விவசாய அபிவிருத்தி பயிர்த்துறையில் பழக்கமும், குடா, ஏரிகளில் நன்னீர்ப்பாவனையும், நீர்ப்பாவனையின் பொருளாதாரம் பற்றிய அறிவும் அவசியமாகும். நேர்அமைச்சுகள், வடக்கு - கிழக்கு மாகாணசபை, யாழ்ப்பாண அரசாங்க அதிபர், நோராட் போன்ற ஏனைய உதவி வழங்குகின்ற அமைப்புகளுடன் நல்லுறவு கொண்டிருப்பதுடன் தொடர்புகொள்வதிலும் கண்காணித்தலிலும் மதிப்பீடு செய்வதிலும் அனுபவம் உடையவராக இருத்தல் அனுகூலமாக கருதப்படும்.

*இடம்* : கொழும்பு வேலைத்தளமாக இருந்தபோதும் யாழ்ப்பாணத்திலும் வேலைசெய்யக்கூடியவராக இருத்தல்வேண்டும்.

*சம்பளம்* : கலந்துரையாடித் தீர்மானிக்கப்படும்.

**4. திட்ட முகாமையாளர் பதவி**

*தகைமை* : கட்டட பொறியியல் துறையில் பட்டப்படிப்புடன் அல்லது டிப்ளோமா பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் உறுப்புரிமையுடைவராயிருத்தல் வேண்டும்.
தமிழ், ஆங்கிலத்தில் அறிவுடையவராய் இருத்தல்வேண்டும்.

*அனுபவம்* : நீர் முகாமைத்துவம், நீர்ப்பாசனம் பற்றிய துறையில் 15 வருட அனுபவமும் அதில் நிறைவேற்று நிலையில் குறைந்தது 8 வருட அனுபவமும் உடையவராயிருத்தல் வேண்டும்.
தமிழ், ஆங்கிலத்தில் பட்டறைகள் நடத்தக்கூடியவராக இருத்தல்வேண்டும்.

*வயது* : 60 வயதிற்கு குறைந்தவராயிருத்தல் வேண்டும்.

*இடம்* : யாழ்ப்பாணம்

*சம்பளம்* : மாதாந்தம் ரூபா 50,000/-

**5. திட்ட கணக்காளர் பதவி**

*வயது* : 30 வயதிற்குட்பட்டவராயிருத்தல் வேண்டும்.

*தகைமை* : இலங்கையில் பட்டயக் கணக்காளர் நிறுவனம் அல்லது பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தில் முழு அல்லது பகுதியாகத் தேர்ச்சி பெற்றவர். அத்துடன் விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் உறுப்புரிமை அல்லது பட்டப்படிப்புடையவராயின் முன்னுரிமை வழங்கப்படும். கணனி அறிவு கூடிய தகைமையாக கருதப்படும்.

*அனுபவம்* : அரசாங்க திணைக்களத்திலோ அல்லது கூட்டுத்தாபனத்திலோ தகுதியுடைய கணக்காளரின்கீழ் குறைந்தது 2வருட அனுபவமும், செயல்திட்ட திட்டமிடலில் அனுபவமும் கூடிய தகைமையாகக் கருதப்படும்.

*மொழி* : தமிழ், ஆங்கிலம், சிங்களமாகிய மூன்று மொழிகளிலும் கணக்கறிக்கைகளை வாசிக்கக்கூடியவராக இருத்தல்வேண்டும்.

*சம்பளம்* : மாதாந்தம் ரூபா 25,000/-

**6. கணனி ஒழுங்காக்குநர் பதவி**

*வயது* : 25 வயதுக்கு குறைந்தவராயிருத்தல்வேண்டும்.

*பயிற்சி* : கணனி மயமாக்கப்பட்ட திட்டமிடல் மற்றும் அட்டவணைப்படுத்தலில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.
கணனி உபயோகங்கள் - (**MS - Word, Excel, Power Point, Access**)
கணனி மொழிகள் - (**visual Basic Java C++**)
தரவு ஒழுங்கமைத்தலும் முகாமைத்துவமும்

*அனுபவம்* : அரசாங்கத்திணைக்களத்திலோ அல்லது கூட்டுத்தாபனத்திலோ கணனி மயமாக்கப்பட்ட திட்டமிடல் ஒழுங்காக்கல் அறிக்கையிடலில் குறைந்தது 2 வருட அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும்.
தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கமைய செயல்திட்ட அறிக்கை தயாரித்தலில் அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும். அபிவிருத்தித் துறைகளில் (வீதி, நீர்ப்பாசனம், நீர் வழங்கலடங்கலாக விவசாயம், சுகாதாரம், கல்வி, உட்கட்டமைப்புகள்) செயல்திட்ட அறிக்கை தயாரிப்பதில் அனுபவமுடையவராயிருத்தல்வேண்டும். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களினதும் அகதிகளினதும் புனர்நிர்மாண மீள்குடியமர்த்துகை தரவுகளை ஒழுங்கமைய வகுத்தலில் அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும்.

*சம்பளம்* : சகலதுமடங்கலாக ரூபா 15,000/-

மேற்குறிப்பிட்ட தகைமைகளையும், அனுபவங்களையும் கொண்டவர்கள் அண்மையில் தயாரிக்கப்பட்ட சுயவிபரக்கோவையுடன் கீழுள்ள விலாசத்திற்கு இவ்விளம்பரம் கிடைத்து 10நாள்களிற்குள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டும்.

விண்ணப்பங்கள் முத்திரையிட்ட தபாலுறைகளில் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

**செயலாளர்,**
**புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சு**
**B.O.I. கட்டடம்,**
**3ஆவது மாடி, இல.14, சேர் பாரோன் ஜெயதிலக மாவத்தை, கொழும்பு - 01.**

(சி-27812)

உதயன்

# நம்பியார் கவலைப்படுவதும் கவலைப்படாததும்

பலரும் எதிர்பார்த்த - இந்தியாவின் முன்னாள் இராணுவத் தலைமையதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் சதீஷ் நம்பியாரின் - உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றிய அறிக்கை வெளியாகியிருக்கின்றது.

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்த பல லட்சம் பொதுமக்களின் வீடு, வாசல் மற்றும் குடியிருப்புகளை ஆக்கிரமித்து வைத்திருக்கும் அரச படைகள், அவற்றை உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசம் என அறிவித்து அங்கு மக்கள் மீளக்குடியமர விடாமல் தடுத்து, பெரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு நிற்கின்றன என்பது தமிழர் தரப்பின் குற்றச்சாட்டு.

இடம்பெயர்ந்த மக்களின் பேரவலம் சம்பந்தப்பட்ட இந்த மனிதாபிமானப் பிரச்சினையை அரச படைகளின் பாதுகாப்புத் தொடர்பான இராணுவப் பிரச்சினையாக மாற்றி, அந்த மக்களைத் தொடர்ந்து நட்டாற்றில் தவிக்கவிட்டிருக்கின்றது அரசு.

அதுமட்டுமல்ல, அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்டபடி வழமை நிலையை ஏற்படுத்தவேண்டிய நடவடிக்கைகளை நிறைவேற்றும் கடப்பாடுடைய அரசு, மக்களை மீளக் குடியமர அனுமதிக்க மறுத்ததன்மூலம் ஏற்கனவே காணப்பட்ட இணக்கத்தையும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் மீறுகின்றது என்று புலிகள் குற்றஞ் சுமத்துகின்றார்கள்.

எனவே, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏதேனும் உருப்படியான ஆலோசனையைப் பெறலாம் என்ற நோக்கத்தில் இராணுவ நிபுணர் ஜெனரல் சதீஷ் நம்பியாரின் உதவியை அரசு நாடியதாகக் கூறப்பட்டது.

ஆனால், எதிர்பார்க்கப்பட்டபடி, ஜெனரல் நம்பியாரும் அரசுத்தரப்பினர் போல இந்த மனிதாபிமானப் பிரச்சினையைத் தனது இராணுவச் சிந்தனை ஊடாகவே நோக்கியிருக்கின்றார் என்பதை அவரது அறிக்கை தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கின்றது.

உயர்பாதுகாப்பு வலயங்களை கொஞ்சம் கொஞ்சமாக அகற்றுவது அல்லது சிறுப்பிப்பது குறித்தும், அதற்காகப் புலிகளுக்கு விதிக்கப்படவேண்டிய நிபந்தனைகள் குறித்துமே நம்பியாரின் அறிக்கை பெரிதும் பிரஸ்தாபிக்கின்றது. அத்தோடு, புலிகளின் இராணுவ உறுதி, தாக்குதல் திறமை, ஆயுத வலிமை ஆகியவை தொடர்பாக அரச படைகளுக்கும் அவற்றின் தளபதிகளுக்கும் உள்ள அச்சங்கள் பற்றியே திரும்பத் திரும்ப தமது அறிக்கையில் பல இடங்களில் கவலைப்படுகின்றார் அவர்.

அத்தோடு, சில இடங்களில் உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதால் அப்பிரதேசத்தில் உள்ள குடிமக்களின் இன உணர்வுத் தன்மையில் ஏற்படக்கூடும் எனத் தாம் கருதும் பதற்றம் குறித்தும் அவர் அச்சமும் கவலையும் படுகின்றார்.

ஆனால், தாம் கவனத்தில் எடுத்துக்கொண்ட விடயம் பல லட்சம் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை சம்பந்தப்பட்டது, தமது தாயகப் பூமியை விட்டுத் துரத்தப்பட்டு அகதி முகாம்களிலும் நலனோம்பு நிலையங்களிலும் சொல்லொணா அவலங்களைத் தொடர்ந்து அனுபவித்து, வாடித் துவண்டு நிற்கும் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையுடன் தொடர்புடையது என்பது குறித்துக் கவலைப்பட அவருக்குத் தோன்றவில்லை.

மனிதாபிமானப் பிரச்சினையை இராணுவக் கண்ணாடி கொண்டு நோக்கிய கபடத்தனத்தின் விளைவே இந்த அறிக்கை என்பது தெளிவு.

உயர்பாதுகாப்பு வலயங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக அகற்றுதல் மற்றும் சிறுப்பித்தல் ஆகியவை குறித்து விவரிக்க முற்படும் ஜெனரல் நம்பியார் தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினையை உணரத் தவறிவிட்டார். தமிழ் மக்கள் கோருவது அதுவல்ல.

உயர்பாதுகாப்பு வலயமோ, என்னவோ இருந்துவிட்டுப் போகட்டும். அதை, நீங்கள் பேணினாலும் சரி, பேணாவிட்டாலும் சரி. ஆனால், அதைக்காட்டி மக்கள் மீளக்குடியமர்வதைத் தடுக்காதீர் என்பதே தமிழர்களின் கோரிக்கை; வேண்டுதல்; வற்புறுத்தல்.

அந்தக் கோரிக்கைக்கு நேரடியாக வழிவகையை - பதிலை - தீர்வை - தராமல் சுற்றிவளைத்து வேறு ஏதோ முழங்கியிருக்கின்றது நம்பியாரின் அறிக்கை.

மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையைப் புலிகளின் ஆயுதக் களைவு மற்றும் இராணுவக் களைவுடன் தொடர்புபடுத்தும் இந்த அறிக்கையை பலரும் எதிர்பார்ப்பது போன்று புலிகள் நிராகரிப்பதும் தவிர்க்கமுடியாததாகவே இருக்கும்.

## பிந்துனுவெவ படுகொலை வழக்கு: அடுத்த மாதம் 11ஆம் திகதி தீர்ப்பு!

கொழும்பு,மே10

பல தமிழ் இளைஞர்கள் பலியெடுக்கப்பட்ட பிந்துனுவெவ தடுப்பு முகாம் படுகொலைகள் சம்பவம் தொடர்பான வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் ஜூன் மாதம் 11ஆம் திகதி வெளியாகும்.

மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இதனை அறிவித்தது.

2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் 25ஆம் திகதி பண்டாரவளை, பிந்துனுவெவ தடுப்பு முகாமில் காலை 5மணியளவில் இந்த மனிதப் படுகொலைகள் இடம்பெற்றன. இதில் 25தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர். 14பேர் படுகாயம் அடைந்தனர்.

இது சம்பந்தமாக இராணுவத்தினர், பொலீஸார், பொதுமக்கள் என 41பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 23பேர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்.

சட்டமா அதிபர் திணைக்களம் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்து 'ட்ரயல் அட்பார்' முறையில் விசாரணை நடத்த உத்தரவிட்டது.

இவ்வழக்கை மேல்நீதிமன்ற நீதிபதிகள் சரத் அம்பேபிடிய, ஏரிக்பஸ்நாயக்க, உபாலி அபயரத்ன குழு விசாரணை செய்து வருகிறது.

இருதரப்பு தொகுப்புரைகளும் முடிவுற்ற நிலையில் தீர்ப்புக்காக விசாரணை எதிர்வரும் ஜூன் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(எ)

## நாட்டு நடப்பு

### பெற்றோர் பாசம்

பலகாலம் படுக்கையாகி
பார்ப்பவர் எவருமின்றி
பங்குனி பதினெட்டாம் நாள்
பரமசாமியார் உயிர் பிரிந்தார்.

அமெரிக்கா, கனடா, நோர்வே
ஆருயிர்க் குழந்தை ஐந்தும்
வருவோம் வாரம் ஒன்றின் பின்னே
வடிவாய் "எம்பாம்" செய்யுமென்றார்.

கறுத்துப்போய் கருவாடான
கல்விமான் பரம சாமியாரை
பங்குனி இருபத் தெட்டில்
பாடையில் கிடத்த வந்தார்.

வைத்த கொள்ளி எரியுமுன்னே
வந்தவர் பயணமானார்
கடாறு முன்னே மக்கள்
கனடா சென்றடைந்து விட்டார்.

இப்படிப் பெற்றோர் பாசம்
இருக்குது இந்த நாட்டில்!

- விகடகவி.

# பிரபாகரனைக் கொலை செய்வதற்காக கூலிக்கு வேவு பார்த்தது ஈ.பி.டி.பியே!

### விநாயகமூர்த்தி எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,மே10

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வந்திருந்தபோது தேசியத் தலைவர் பிரபாகரனைக் கொலை செய்வதற்கு வன்னி சென்று வேவு பார்க்கப்பட்டது தொடர்பாக ஈ.பி.டி.பியினர்மீது யாழ். மாவட்ட தமிழ் கூட்டமைப்பு எம்.பியும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி குற்றம் சுமத்தினார். ஈ.பி.டி.பியினர் அரசியல் நடத்துகிறார்களா அல்லது கூலிக்கு வேவு பார்க்கிறார்களா என்று அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

புலிகள் மீது போர் தொடுக்க வேண்டும்; புலிகளை அழிக்க வேண்டும்; அவர்கள் பேச்சுக்கு வரமாட்டார்கள் என்றெல்லாம் எதிர்க்கட்சியினர் ஒப்பாரி வைக்கின்றனர்.

சமாதானப் பேச்சுகளிலிருந்து புலிகள் ஏன் தற்காலிகமாக விலகி இருக்கின்றனர்? புலிகளும் அரசும் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தவில்லை என்பதே அவர்களின் - நியாயமான குற்றச்சாட்டு.

ஒப்பந்தத்தின் மூலம் நாட்டின் சகல பகுதிகளிலும் இயல்பு நிலை ஏற்படுத்தப்படவேண்டும். அனைவரும் சுதந்திரமாக வாழ வழிவகுக்க வேண்டும்.

தென்பகுதியில் அமைதி இப்பொழுது ஏற்பட்டுள்ளது. ஆனால், வடக்கில் பல லட்சம் மக்கள் அமைதி இழந்து வாழ்கின்றனர். இதைத் தொடர்ந்தும் அங்கீகரிக்க முடியாது - என்றார்.

(ஐ)

### வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியே பிரிப்பதற்கான

# சர்வஜன வாக்கெடுப்பு நடத்துமாறு கோரும் மனுவை விசாரிக்க 'அப்பீல்' நீதிமன்றம் முடிவு

கொழும்பு,மே10

தற்காலிகமாக இணைக்கப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியாகப் பிரிப்பதற்கு முன் அது தொடர்பாக நடத்தப்படவேண்டியிருக்கும் சர்வஜன வாக்கெடுப்பை உடனடியாக நடத்த உத்தரவிடும்படி கோரி சேருவில சருணகீர்த்தி தேரோ உட்பட கிராம மக்கள் தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரிக்க ஏற்றுக் கொண்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதியரசர்கள் ஷிராணி திலகவர்தன, பி.விஜேரத்ன ஆகியோர் முன்னிலையில் அடுத்த மாதம் 19ஆம் திகதி விசாரணை ஆரம்பமாகும்.

பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சர் அலிக் அலுவிஹார எதிர் மனுதாரராக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

மனுவைப் பரிசீலனை செய்த சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் பூர்வாங்க ஆட்சேபனை ஒன்றைத் தெரிவித்துள்ளார்.

அரசமைப்புச் சட்டத்தின்படி சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தும்படி உத்தரவிடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மாத்திரமே உண்டு. ஆனால், இந்த மனுவில் ஜனாதிபதியை எதிர் மனுதாரராக குறிப்பிடப்படாதது ஆட்சேபனைக்குரியது என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

(எ)

### பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியும்

# யாழ்.படைகளின் தளபதி தடைவிதித்திருக்கும் ஐஸ் தொழிற்சாலையை அமைக்க அறிவுறுத்துக!

### ஒஸ்ரினிடம் அமைச்சர் ஜயலத் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே10

வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம், யாழ்.முதலாம் குறுக்கு வீதியில் ஐஸ்கட்டித் தொழிற்சாலையை அமைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளபோதும், யாழ்.படைகளின் தளபதி அதற்கு தடைவிதித்துள்ளதாகவும் -

ஐஸ் கட்டித் தொழிற்சாலையை அமைப்பதற்கு அனுமதிக்குமாறு யாழ்.படைகளின் தளபதிக்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டுமெனவும் - தெரிவித்து அகதிகள் மீள்குடியமர்த்துகை, புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அவர் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.முதலாம் குறுக்கு வீதியில் வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினால் ஐஸ்கட்டித் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதனை அமைப்பதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக் கடிதம் ஏற்கனவே கடந்த ஓகஸ்ட் மாதமளவில் வழங்கப்பட்டுவிட்டது.

(அதன்பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

அவ்வாறு இருந்தும் யாழ்ப்பாணத்திலுள்ள படையினர் அதனை அமைப்பதற்குத் தடைவிதித்துள்ளார்கள் என்பதனைத் தங்களுடைய கவனத்துக்குக் கொண்டுவருகின்றோம்.

ஐஸ்கட்டித் தொழிற்சாலையை அமைப்பதற்கு வடமாகாண கடற்றொழிலாளர் சாங்கத்துக்கு அனுமதி வழங்கவேண்டுமென யாழ்.படைகளின் தளபதிக்கு அறிவுறுத்தல் வழங்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன் - இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-9)

### நாளை

சித்திரை 28
ஞாயிற்றுக்கிழமை
11.05.2003
திதி : தசமி
முன்னிரவு 1.05 வரை
நட்சத்திரம் : பூரம்
முன்னிரவு 1.09 வரை
சுபநேரம் : 9.54 - 10.24
ராகுகாலம் : 4.24 - 5.54
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

இறைவனுக்கு அஞ்சுபவனே உண்மையான அறிவாளியாவான்.

# புலிகளின் அரசியல் குழு ஸ்பெயினுக்குச் சென்றது

மட்றிட்,மே10


சமஷ்டி முறையிலான ஆட்சி பற்றிய விடயங்களை ஆராயவென வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள புலிகளின் அரசியல் விவகாரக் குழு நேற்றுமுன்தினம் ஸ்பெயினுக்குச் சென்றுள்ளது.

நோர்வே, சுவீடன், டென்மார்க், கிறீன்லாந்து, சுவிஸ்சர்லாந்து முதலான நாடுகளுக்குச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு அங்குள்ள சமஷ்டி முறை பற்றி ஆராய்ந்த இந்தக் குழுவினர் நேற்றுமுன்தினம் சுவிஸ்சர்லாந்திலிருந்து ஸ்பெயினுக்குப் பயணமாகினர். அந்நாட்டில் உள்ள சமஷ்டி முறை பற்றி அறிந்துகொள்ளும் இக்குழுவினர் பின்னர் அங்கிருந்து பெல்ஜியம், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கும் செல்லவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-12)

# பிராந்திய இந்து மாநா

10-05-



## பெருமைமிகு இந்துக்களாய் மேதினியில் வாழ்ந்திடுவோம்!

காலத்தால் மூத்த மதம் – எக்
காலத்தும் அழியா மதம்
ஞாலத்தில் உயர்ந்த மதம் – மெய்
ஞானிகள் வளர்த்த மதம்
அன்பேசிவ மறிவேதெய்வ – மென
ஆன்றோர் சொன்ன மதம்
துன்பங்கள் வந்தபோதும் – இறை
துதியேமருந் தாகிய மதம்
அறுபத்துமூன்று நாயனார்வழி – மன
ஆறுதலைத் தருமெம் மதம்
பேறுபல தந்திடும் மதமிது – அதி
பெருமைக்குரிய இந்துமதம்
மாநிலம் போற்றிடும் – உயர்
மாண்புமிகு எம்மத வழியைப்
பேணியென்றும் வாழ்ந்திடுவோம் – பாரில்
பெருமைமிகு இந்துக்களாய்!

– கவிஞர் இரா.யோகராஜன் (சோதிடர்)

## தூயசிந்தனை, பரந்தநோக்கு இந்து மாநாடு எமக்குத் தந்திடும்

நீண்டகாலமாகவே ஈழத்தமிழ் மக்களின் வாழ்விலே புரையோடிப்போயிருக்கும் கறைபடிந்த வாழ்வைப் போக்கி, மக்கள் வாழ்விலே, சமூக, கலை, கலாசார, பண்பாட்டிலே மறுமலர்ச்சி ஏற்படுத்தவும் –

சைவ ஆன்மீக, விழுமியக் கோட்பாடுகள் மூலம் நிறைவான ஆன்மீக பலத்தை ஏற்படுத்துவதற்காகவும்–

இந்து கலாசார அமைச்சு இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

மேற்படி மாநாட்டின் தொனிப் பொருள்களில் ஒன்றாக ஈழத்தில் போர்ச் சூழலின்போது சிதைவடைந்த ஆலயங்களை மீண்டும் புனரமைத்து அங்குள்ள தடைகளை நீக்கி மக்களின் சுதந்திரமான வழிபாட்டுக்கு அனுமதித்தல் என்பது அமைகின்றது.

ஈழத்திலே இருபது ஆண்டுகள் நடைபெற்ற கொடிய யுத்தத்தின் பலனாக சுமார் 3ஆயிரம் இந்து ஆலயங்கள் குண்டு வீச்சினாலும், ஷெல் தாக்குதல்களினாலும், சேதமடைந்தும் முற்றாக அழிவடைந்தும்விட்டன. இவற்றுள் நாயன்மார்களினால் பாடல் பெற்ற தலங்களும், மூவேந்தர்களால் நிறுவப்பட்ட தலங்களும் அடங்கும். இந்துமதம் மீண்டும் புதுப்பொலிவு பெறவேண்டுமானால் மேற்படி புராதன திருத்தலங்கள் மீண்டும், புதுப்பொலிவு பெற வேண்டும்.


திருமூலரால் 'சிவபூமி' என அழைக்கப்பட்டது எங்கள் ஈழமணித் திருநாடு. இராவணன் சிவபூசை செய்து வழிபட்டு வாழ்ந்த நாடு. இவ்வாறாக சிவமணங் கமழும் சமயப் பற்று, ஆன்மீக நெறி தழைத்தோங்கிய எமது நாட்டிலே எத்தனை எத்தனை சமய நெறிகள் இருந்தாலும், ஆதியும் அந்தமுமில்லாத சிவபெருமானை முழுமுதற் பரம்பொருளாகக் கொண்ட இந்து சமயம் சமயங்களுக்கெல்லாம் மூத்தது இதுவெனில் மிகையாகாது.இந்து தர்மத்தின் பெருமைகளையும் அதன் சிறப்பியல்புகளையும் உலகளாவிய ரீதியில் வெளிப்படுத்த சுவாமி விவேகானந்தர் பலமான அத்திவாரத்தை பன்னெடும் ஆண்டுகளுக்கு முன்னரே இட்டுள்ளார். சுவாமியின் வழியில் பல ஆன்மீகப் பற்றாளர்களும், ஞானிகளும், சுவாமிகளும், சமயத் தலைவர்களும் இந்து சமயத்தின் கொள்கையை, நெறியை உலக மக்களிடையே பரவச் செய்து வருகின்றார்கள்.

மதமாற்றங்கள் மேலோங்கி வருகின்ற இந்தவேளையில் இந்துமத பண்பாட்டு பாரம்பரியங்களையும் அதன் விழுமியங்களையும், முன்னெடுக்கும் நோக்கிலே "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற தொனிப்பொருளிலே இரண்டாவது மாநாடு நடைபெற்று சர்வதேச ரீதியிலும் நடத்தப்படுகின்றது.

இந்துக்களாகிய நாம் முதலில் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். மதம் என்பது சரியாக புரிந்துகொள்ளப்படுமானால் அது யாருக்கும் விரோதியல்ல, மனம் வளர்ந்தால் மனிதன் வளர்வான் இந்த மனதை வளர்ப்பதற்காக ஏற்பட்டது மதம். ஆக, மனிதனுடைய மனவளர்ச்சிக்காக இந்த ஆன்மீக மதம் இருக்கிறது. நமது இந்துமதம் வாழ்க்கையுடன் ஒட்டி இருக்கிறது. இயற்கையோடு இணைந்து இருக்கிறது.

வேப்பமரத்தில் இருக்கிறது, அரசமரத்தில் இருக்கிறது, குளத்தங்கரையில் இருக்கிறது, வாழ்க்கை முறை என்பதுதான் மதம் என்று ஆனபிறகு வாழ்க்கை முறையை வெறுப்பது சரியல்ல. அதனால் முறையான வாழ்க்கையை விரும்புபவர்கள் மதத்தை வெறுக்கக்கூடாது. தற்போது இந்துமதத்திற்கான சவால்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த சவால்களை எதிர்கொள்ள வேண்டிய கடமை ஒவ்வோர் இந்துவுக்கும் உண்டு. உலக மாநாடும், பிராந்திய மாநாடுகளுக்கும் இந்த தார்மீக வேண்டுதலை ஏற்று பிரச்சினைகளைத் தீர்த்து தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும்.

– மதுரகவி



பிராந்திய இந்து மாநாட்டை முன்னிட்டு நல்லு… கொடிகள், பதாகைகள், மகர தோரணங்கள் … காட்சி.

## எழில்பெற்றே திகழ ஏந்தி…

சுந்தனைக் கரங்குவித்துக் களிபேருவகை…
காலமறிந்து நாளும் இளங்கன்னித் த…
பைந்தமிழ் வளர்க்கும் நோக்கில் பாரினி…
செந்தமிழ் வளத்தால் மிகவே செழிப்பு…
நந்தமிழ் மக்கள் முன்னே நல்லுரைகளாற்…
இந்து மாநாட்டினை இனிதாய் நடத்…
இந்து கலாசாரம் மிளிரும் இந்த நல்ல மா…
எழில் பெற்றே திகழ ஏந்தின … அ…
சொற்றமிழ் வல்லநல்ல சுந்தரத் தமிழரெல்…
சொக்கமாமீழம் வந்து இந்து மாநாடு…
நற்றமிழ் வளத்தால் மிக்க நானிலம் போற்…
பெற்றியையுடைய நல்ல பேரறிஞர் பல…
கற்றவர் கூட்டந்தனிலே காசினி வியக்கப்…
இந்து மாநாட்டின் இனிமையைக் கண்…
உற்ற பேரின்பமுடனே உவர்ந்து உலகோ…
பெற்றனர் பெருமையன்றோ இந்த மாந…

– கவிமணி…


உலக இந்து மாநாடு சிறப்புற
வாழ்த்துகின்றோம்
சுகமான, சொகுசான, இதமான சவாரிக்கு உகந்த
உன்னதமான உயர்ந்த சாதனம்!
லுமாலா – ஹீரோ – ஏசியா சைக்கிள்கள்
உங்கள் வாழ்நாளில் ஓர் உயர்ந்த பொருளை
வாங்குங்கள்!
ஈஸ்வரன் ரேடர்ஸ்
69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-27720)
பொதிகள் போக்குவரத்துச் சேவையும் உண்டு

உலகத் தமிழ் இந்து மாநாடு உயர்ச்சி பெற
வாழ்த்துகின்றோம்!
பக்ஸ் வசதிகள், போட்டோப் பிரதிகள்,
லமினேற்றிங், கொம்பியூட்டர் ரைப்பிங்
மற்றும்
E-MAIL, INTERNET,
AGENCY POST OFFICE, SALES & SERVICE
இன்னும் பல இலாபகரமான
துரித சேவைகளுக்கு நாடுங்கள்:
ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்
303, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2670, 3588 (சி-27719)

இனிய சமாதான…
இதயம் மகிழத்…
இந்து மாநாடு சிறப்புற வா…
இனித்திடும் இனிய இதமா…
தரம்மிக்க மோட்டார்சைக்கிள்க…
★ MD 90 ★ றீக்கொண்டிசன்…
★ பற்றறி வகைகள்
★ அசிட் வகைகள்
அனைத்துக்கும் நீங்கள் நாட…
அருள்விநாயகர் மோட்…
இல. 106, 108, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி-27712)


உலக இந்து மாநாடு சிறப்புறத் திகழ
வாழ்த்துகின்றோம்
அனைவரும் விரும்பி அருந்துவது
"அண்ணா" கோப்பி
ருசிமிக்க அண்ணா தயாரிப்புகள் தரமானவை.
நீங்கள் நம்பிக்கையோடு நாடவேண்டிய இடம்:
அண்ணா தொழிலகம்
இணுவில்.
அண்ணா கோப்பி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TELE: 021 - 2223565, 070 - 212298 (சி-27718)

இங்கு நடைபெறும் இந்து மாநாடு இனிது சிறப்புற
மனமார வாழ்த்துகின்றோம்
அழகுக்கு அழகு செய்யும் அற்புத
வேலைப்பாடுகளுடன் கூடிய
அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்:
சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 222 2480
சாரங்கன் நகைமாடம் அன்ட் சென்றர்
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
அருள்முருகன் நகைமாடம்
90/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-27716)


"மேன்மைகொள் சைவநீதி …
அகில உலக இந்…
இரண்டாவது அகில உ…
கரமாக அமையவும், இந்…
னமும், மகிழ்ச்சியும் ஏற்…
வீரகத்தி விநாயகர் தாழ் பணிந்து …
கந்தரோடை, பரிபா…
சுன்னாகம். (17716) ஆலடி வீரகத்…

# ாநாட்டுச் சிறப்பிதழ்

# -2003



ட்டு நல்லூர் நாவலர் மணிமண்டபம் நந்திக்
ங்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும்

## ந்திமழையாள் அருளட்டும்

பெருவகை கொண்டு
கன்னித் தமிழ் முழங்க
ம் பாரினிலுயர்ந்த மக்கள்
வ செழிப்புறுமீழம் வந்து
றைகளாற்றிப் போற்றி
ாய் நடத்தும் வேளை
நல்ல மாநாடு
ள் அரு ம்!
தமிழரெல்லாம்
து மாநாடு கூட்டி
லம் போற்றி நிற்கும்
றிஞர் பலரும் வந்தே
வியக்கப் பேசும்
யைக் கண்டு வியக்க
உலகோர் பலரும்
இந்த மாநட்டினால்!

விம்ணி இராசையா ஸ்ரீதரன்

# சைவ அபிமானம் காப்போம்!

எங்கள் நாட்டு இந்து விவகார அமைச்சு எடுக்கும் இந்துமாநாடு சைவமக்கள் மத்தியில் உற்சாகத்தையும், விழிப்புணர்வையும், சைவ சமய அபிமானத்தையும் தட்டி எழுப்பவேண்டும் என உலகத்துக்கு கர்த்தாவாகிய பார்வதி பரமேஸ்வரனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

ஒரு நாட்டுக்கும், ஓர் இனத்தின் பண்பாட்டுக்கும் தாக்கம் வரும் போது அந்தநாட்டு மொழி, இனமக்கள் ஊக்கத்துடனும் அறிவுபூர்வமாகவும் ஒன்றுபட்டு செயலில் இறங்கியும், தனித்தனியும் குறிப்பிட்ட தாக்கத்தால் சிறுமை உண்டாகாது தடுத்து நிலைநிறுத்துவது போல நம் சைவசமயத்துக்கு உள்ளேயும், வெளியேயும் தாக்கம் ஏற்படும் போது விழிப்புடனும் உறுதியுடனும் சைவமக்கள் செயற்படவேண்டும்.

கிறிஸ்தவர்கள் முதலியோர் தம்தம் சமயத்தைப் பரப்ப எடுக்கும் முயற்சி போன்ற காரணங்களால் சிறிதும் பெரிதுமாகத் தோன்றும் தாக்கங்கள் பற்றி நம் சைவமக்களும், குருமாரும் அலட்சியமாய் இருப்பது அவமானத்தையும் வேதனையையும் உண்டு பண்ணுகின்றது.

நீண்டகால வரலாற்றுப் பெருமையையும் பல்ப்பல அடிப்படை களில் அமைந்த தத்துவங்கள் - கிரியைகள் போன்றவற்றையும் எக்காலத்திலும் இறையனுபவத்தை உடையவர்களின் மிக நீண்ட பட்டியலையும் பல தரத்திலும் வசதி, மனப்பக்குவம் உடையவர்களின் மேன்மையையும் சைவ சமயத்தின் மகிமையையும் நுணுக்கமாக எல்லோரும் அறிந்து மேன்மையடைய இந்த இந்து மாநாடு சிறந்த நிமித்தமாக அமைய வேண்டும்.

இந்துமாநாட்டை முன்னிட்டு சைவமக்கள் அனைவரும் தாம் பெற்ற இறையருள் அனுபவங்களை நினைவு கொண்டு ஏனைய சமயத்தவர்கள் கூறுவது போல் தம் சமயத்தால்தான் இறையருளைப் பெறலாம், பிறசமயங்களால் இறையருள் துணையைப் பெற இயலாது என்பன போன்ற பொய் பிரசாரங்களை முறியடித்து சைவ அபிமானம், அறிவு ஒழுக்கங்களை நாம் அனைவரும் பேண வேண்டும்.

அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை,
திருநெல்வேலி.

# இந்து மாநாட்டுச் சிந்தனை

இந்துக்கள் ஒவ்வொருவரும் தமது நாளாந்த வாழ்வியல் அம்சங்களில் பிரார்த்தனையை முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டும். இந்துமாநாட்டுக் காலத்தில் மட்டுமன்றி, தொடர்ந்தும் நாம் இதனைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இந்துக்கள் இறைவனின் பிரார்த்தனைக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள். ஆலயங்கள் மற்றும் வீடுகளில் பிரார்த்தனைகளை செய்யும் வழக்கமும் உள்ளது.

பிரார்த்தனைக்கு நேரம், இடம் இடையூறாக இருக்கக்கூடாது என்பதற்காக நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும், என்றும், எவ்விடத்திலும் அவன்தாள் நினை என்று அறிஞர்கள் நமக்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

பிரார்த்தனைகள் இறை சிந்தனையை மனங்களில் நிறைக்கின்றது. இதனால், தூய்மை ஏற்படுகின்றது. வாழ்க்கையில் தூய்மை ஏற்பட்டுவிட்டால் எண்ணியவை கைகூடப்பெறும். இதன் மூலம் தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நன்மைகள் கிட்டும்.

பிரார்த்தனைக்கு மன ஒருமைப்பாடும் பக்தியும் முக்கியமாகும். இறைவனிடத்தே கொள்ளும் அன்பே பக்தியாகும். உண்மையான பக்தி என்பது இறைவனிடம் எதனையும் கேட்காது அவனைப் பிரார்த்திப்பதும் பணிந்து நடப்பதும் அவன் தருவதை மனதார ஏற்றுக்கொள்வதுமாகும்.

பிரார்த்தனையின் உச்சநிலை இறைவனிடத்தில் முழுதாக எம்மை ஒப்படைத்தலாகும். பூரண சரணாகதி என்பது இதுவாகும்

ஆன்மீகப் பயிற்சியாக ஆலய தரிசனம், ஜெபம், தியானம், கூட்டு வழிபாடு, விரதம், சைவ ஒழுக்க வாழ்வு போன்ற பல்வேறு வழிகள் மூலம் பிரார்த்தனையை மேற்கொள்ள முடியும்.

இறைவழிபாடு நம்மை தூய்மையாக்குகின்றது. மானிடப் பிறவியின் நோக்கம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதல் என்கிறார் நாவலர் பெருமான். ஆலயமும் பிரார்த்தனையும் இவ்வுயர் நோக்கத்தை அடையப் பெறுதலுக்கு உறுதுணையாய் விளங்குகின்றன என்பதை உணர்வோம்.

- சிவா


மாதானத்தை
கிழத் தந்திடும்
புற வாழ்த்துகின்றோம்!
இதமான சவாரிக்கு
த்கிள்களை வாங்குங்கள்.
ன்டிசன் மோட்டார்சைக்கிள்கள்
★ சோலர் வகைகள்
★ உதிரிப்பாகங்கள்
கள் நாடவேண்டிய இடம்:
மோட்டோர்ஸ், ரேடர்ஸ்
ி.
கிளை:
262, கண்டி வீதி,
சாவகச்சேரி.
2)

சவநீதி விளங்குக உலகமெலாம்"
இந்து மாநாடு - 2003
கில உலக இந்து மாநாடு வெற்றி
ம், இந்நாட்டில் நிரந்தர சமாதா
ம் ஏற்பட கந்தரோடை ஆலடி
ிந்து இறைஞ்சுகின்றோம்.
பரிபாலன சபை,
வீரகத்தி விநாயகர் ஆலயம்.

இந்து மாநாடு இனிதே இடம்பெற
இதயங்கனிந்த வாழ்த்துக்கள்!
நவீன பாணியிலமைந்த
நவநாகரிகமான
புடைவைத் தினுசுகளுக்கும்
புத்தம் புதிய துணிவகைகளுக்கும்
சிறந்த இடம்:
அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
54, பெரியகடை, யாழ்ப்பாணம்.
T.P. 222 - 2899
(சி-27713)

இந்து மாநாடு இனிதே இடம்பெற
இதயபூர்வ நல்வாழ்த்துக்கள்!
அழகற்ற பற்களா? மிதப்புப் பற்களா? பார்வைக் குறைபாடா?
கவலையை விடுங்கள்! நாடுங்கள்!!
எரிக்கனேஸ்
☛ மின்னிடும் மகத்தான சங்குப் பற்களை கட்டிடவும்
☛ மிதப்புப் பற்களுக்கு கிளிப் போடவும்
☛ கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெறவும்
☛ கட்டுப் பற்களை சுத்தம் செய்வதற்கான மாத்திரை பெறவும்
நாடவேண்டிய ஒரே நிறுவனம்:
எரிக்கனேஸ்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 2486
கிளை: பழைய பொலீஸ் நிலையம் முன்பாக இல. 80, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
கிளை: இல. 91. கே.கே.எஸ். வீதி. கொக்குவில் சந்தி, கொக்குவில்.
(சி-27715)

இந்து மாநாடு இனிதே நடைபெற
எமது இதயம் கனிந்த இனிய வாழ்த்துக்கள்!
தரமான நல்ல ரகமான திறமான
பலசரக்குப் பொருள்களுக்கு என்றும்
நம்பிக்கையான மிகவும்
நாணயம் வாய்ந்த இடம்:
குகன் ஸ்ரோர்ஸ்
180 (380), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 - 222 2767
(சி-27721)

இந்து மாநாடு இனிதே இடம்பெற
எமது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!
புத்தம் புதிய
புடைவை வகைகளுக்கும் நவீனமய
துணி மணிகளுக்கும் மற்றும் நவநாகரிக
ஆடைத் தெரிவுக்கும்
உடனே நாடுங்கள்:
கணேசன் ஸ்ரோர்ஸ்
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-27714)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தரும் (J-78 அத்தியடி)
யாழ்.பிரதேச செயலக தலைமைக் காரியாலய சமுர்த்தி முகாமையாளர்
**திருமதி யோ.ராகினி** அவர்களின் அன்புக் கணவருமான

**அமரர் சின்னத்துரை யோகராசா**

அவர்களின் பிரிவால் ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*நலன்புரிச் சங்கம்,*
*பிரதேச செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*

(17746)

பிரதேச செயலாளரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்.

## பாஷையூர் வீதி திருத்தம் ஆரம்பம்

கொழும்புத்துறை,மே10

பாஷையூர் 3ஆம் குறுக்கு வீதி செப்பனிடப்பட்டு வருகிறது.

நீண்டகாலமாக குன்றும் குழியு மாகக் காணப்பட்ட இந்த வீதியைப் புனரமைக்குமாறு பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்றச் சனசமூக நிலையத்தினர் கோரிக்கை விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-30)

## மிதிவெடி அகற்றும் பணியில் படையினர்

சாவகச்சேரி, மே10

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் பொதுமக்கள் குடியிருப்புக்களில் நிலத்தில் புதையுண்டுள்ள மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள்களை மீட்கும் பணியில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதியில் கடந்த மூன்று தினங்களாக இப்பணியில் ஈடுபட்டிருந்த படையினர் தாம் மீட்ட வெடிபொருள்களை கடந்த புதனன்று செயலிழக்கச் செய்தனர். (எ-31)

### சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பு

## கிழக்கைப் பிரிக்க அதாவுல்லா குழுவுடன் இணைந்து போராடத் தீர்மானம்

கொழும்பு,மே10

வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியே பிரிக்க வேண்டுமெனக் கோரும் சகல தரப்பினருடனும் இணைந்து அதற்கான போராட்டம் ஒன்றை நடத்துவதென சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பு தீர்மானித்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட இந்த அமைப்பின் விசேட கூட்டம் ஒன்றில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதென அமைப்பின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப பிரித்து அவ்விரு மாகாணங்களுக்கும தனித்தனியான ஆளுநர்கள் நியமிக்கப்பட வேண்டுமெனக்கோரும் அதாவுல்லா குழு, முஸ்லிம் லீக் ஆகியவற்றுடன் இணைந்து இவ்விடயத்தில் செயற்பட சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பு நடவடிக்கை எடுத்துவருகிறது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் அந்த அமைப்புடன் இதுதொடர்பாகச் சேர்ந்து செயற்பட இணங்கியிருக்கிறது எனவும் கூறப்படுகிறது.

அதாவுல்லா குழு எம்.பிக்களுடன இது குறித்து பேச்சு நடத்தவும் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பு தயாராகி வருகிறது.(எ)


## புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சு
## யாழ் நீர்வள சூழலியல் பாதுகாப்புத் திட்டம்
### யாழ்ப்பாணத்தில் பணியாற்ற குறுங்கால ஒப்பந்த அடிப்படையில் ஆலோசகர்கள் தேவை

யாழ். நீர்வள, சூழலியல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஆய்வுகள், திட்டமிடல் வடிவமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணத்தில் வேலைசெய்யக்கூடிய பின்வரும் நிபுணத்துவமிக்கோர் தேவைப்படுகின்றனர்.

விண்ணப்பங்கள் தனிப்பட்டோரிடமிருந்தோ அல்லது ஆலோசனை, சேவைகள் வழங்கும் நிபுணர் குழுக்களிடமிருந்தோ ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைப்படும் நிபுணர்களும் அவர்களுடைய சேவைகள் பெற்றுக்கொள்ளப்படும் காலமும்

| | |
|---|---|
| 1. ஒரு குழுத் தலைவர் | ஒரு வருடத்திற்கு |
| 2. ஒரு நீர்ப்பாசன வடிவமைப்பு நிபுணர் | 8 மாதத்திற்கு |
| 3. ஒரு நீர்வழங்கல் வடிவமைப்பு நிபுணர் | 4 மாதத்திற்கு |
| 4. ஒரு பொருத்தமான தொழில் நுட்ப நிபுணர் | 2 மாதத்திற்கு |
| 5. ஒரு விவசாய நிபுணர் | 2 மாதத்திற்கு |
| 6. ஒரு நீர்வளர்ப்பு நிபுணர் | 1 மாதத்திற்கு |
| 7. ஒரு அளவையாளர் | 4 மாதத்திற்கு |
| 8. ஒரு சூழலியல் நிபுணர் | 1 மாதத்திற்கு |

அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர்களைத் தவிர ஏனைய நிபுணர்கள் அனைவரும் பட்டப்பின்படிப்புக் கல்வித்தரங்களைக் கொண்டவர்களாகவும் இவ்வாறான வேலைகளில் குறைந்தது 15 வருட அனுபவமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்:** அனைத்துக் கொடுப்பனவுகளும் உட்பட மாதத்திற்கு ரூபா 50,000/-

**பிரயாண வசதிகள்:**
களநிலை வேலைகளுக்கும் மேற்பார்வைகளுக்கும் அலுவலக வாகனம் வழங்கப்படும்.
யாழ். குடாநாட்டிற்கு வெளியே உத்தியோகபூர்வ பிரயாணங்கள் மேற்கொள்ள நேரிடின் பயணக்கொடுப்பனவுகள் அரசாங்க சேவைத் தரத்தில் வழங்கப்படும்.

**அலுவலக வசதிகள்:**
யாழ். திட்டநிர்வாக அலுவலகத்தில் ஓர் அலுவலக அறை வழங்கப்படும்.

**அலுவலக வசதிகள்:** கணனிகள்

**உதவி உத்தியோகத்தர்:** தொழிநுட்ப உதவியாளர் (Auto-cad) வரைஞர்

இவ்விளம்பரம் வெளியான பத்துநாள்களுக்குள் சுயவிவரக்கோவையுடன் யாழ். முகவரி தொலைபேசி விவரங்களுடன் பின்வரும் முகவரிக்கு-விண்ணப்பிக்கவும்.

செயலாளர்,
**புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சு,**
**B.O.I. கட்டடம்,**
**3ஆவது மாடி, இல.14, சேர் பாரோன் ஜெயதிலக மாவத்தை,**
**கொழும்பு - 01.**

(சி-27810)



## புனர்வாழ்வளிப்பு, அகதிகள், மீள்குடியமர்த்துகை அமைச்சு
## யாழ்ப்பாண நீர்ப்பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பராமரிப்புத்திட்டம்
### குறுகிய காலத்திற்கு பணியாற்ற நிலஅளவையாளர் தேவை

புனர்வாழ்வளிப்பு, அகதிகள், மீள்குடியமர்த்துகை அமைச்சானது மேற்கொள்ளவிருக்கும் நீர்ப்பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பராமரிப்பு திட்டத்திற்கான நிலஅளவையினை மேற்கொள்வதற்காக நிலஅளவையாளரைத் தெரிந்தெடுக்கவுள்ளது.

ஆரம்பகட்டமாக பின்வரும் மூன்று திட்டத்திற்குமான நிலஅளவையும், மட்ட அளவைகளும் அவசியமாகும்.

**1. வழுக்கையாறு உவர்நீர் தடுப்புத்திட்டம்**

அ. அராலி அணை - நிலஅளவையும் மட்ட அளவைகளும்
ஆ. உப்பு தடுப்பு வரம்புக்கட்டுகள் - நிலைக்குத்து, குறுக்குவெட்டு வரைபடத்துடன்

**2. உப்பாறு உவர் நீர் தடுப்பு திட்டம்**

அ. அரியாலை அணை - நிலைஅளவையும் மட்ட அளவைகளும்
ஆ. உவர் நீர் வரம்புக்கட்டுகள் - நிலைக்குத்து, குறுக்குவெட்டு வரைபடத்துடன்

**3. யாழ்ப்பாண மாநகரசபை**

அ. வடிகால் கால்வாய் - நிலைக்குத்து, குறுக்குவெட்டு வரைபடத்துடன்
ஆ. குளங்கள் - நிலஅளவையும், மட்ட அளவைகளும்

யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அத்துடன் நிலஅளவைக்கான உபகரணங்களுடன், கூலியாள்களுடன், குறுகிய கால அறிவித்தலுடன் குறித்த இடங்களுக்கு செல்லக்கூடியவர்களாக இருத்தல்வேண்டும்.

கொடுப்பனவு கீழ்வருமாறு அமையும்

அ. வெளிக்கள வேலைக்கான கொடுப்பனவு:
நிலஅளவையாளருக்கான கொடுப்பனவு, கூலியாள்களுக்கான வேதனம், உபகரணத்திற்கான வாடகை மற்றும் பிரயாணப்படி.

ஆ. படவரைதலுக்கான கொடுப்பனவு:
1. அணைகளுக்கான திட்ட வரைவு

கேள்விக்கான விவரம், காகிதாதி, அச்சடித்தல், பிரதிபண்ணுதல், படவரைஞர் சம்பளம் அடங்கலாக இருத்தல்வேண்டும்.

இவ்வெளிக்கள நிலஅளவை புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் வேலைக்கமர்த்தப்பட்ட நிபுணர்களினால் கண்காணிக்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு 10நாள்களுக்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.

செயலாளர்,
**புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சு,**
**B.O.I. கட்டடம்,**
**3ஆவது மாடி, இல.14, சேர் பாரோன் ஜெயதிலக மாவத்தை,**
**கொழும்பு - 01.**

(சி-27811)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1929 | 2002 |
| 07 | 04 |
| 29 | 20 |



**அமரர் கணபதி செல்லையா**

*திதி: 10-05-2003*

***பாசமுள்ள நாயகனே! ஐயாவே!***
***அம்மப்பாவே! அப்பப்பாவே!***

எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஆனதையா!
உம்மையே நினைத்து எம் உள்ளம் ஏங்குதையா!
உமையெண்ணித் தினந்தினம் தவிக்கின்றோமையா!
இம்மையில் எப்போதுமைக் காண்போமினி?

***உங்கள் ஆத்மா சாந்தியடைய***
***இறைவனை வேண்டுகின்றோம்.***

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

*அராலி வீதி,*
*சங்கானை.*

(17723)

உங்கள் பிரிவால் வாடும்:
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### Dr.இளையதம்பி சின்னராசா

'கமலகம்' மீசாலை தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் Miami அமெரிக்காவில் வசித்தவருமான டாக்டர் இளையதம்பி சின்னராசா 07.05.2003 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - சின்னம்மா தம்பதிகளின் அருமை மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் திருமதி செல்லமுத்து பொன்னம்பலம், நாகராஜா, திருமதி கமலாம்பிகை சத்தியமூர்த்தி, காலஞ்சென்றவர்களான திருமதி சரஸ்வதி தர்மரட்ணம், திருமதி விஜயலட்சுமி வைத்திலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரரும் சிவக்குமார் (மனோ-Miami), குமுதா(பவா - Miami), சிறீகுமார் (சிறீ-வாஷிங்ரன்), குசலகுமாரி(குசலா - Miami), ராஜ்குமார்(ராஜன்-Miami) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் ஹரிஜா(Miami), சிவோதயன்(தவம்-Miami), சிவநாதன் (நாதன் - Miami), தீபா(வாஷிங்ரன்), மார்த்தா(Miami) ஆகியோரின் அருமை மாமனாரும் சகிலன், சயன்,சாரங்கன், தனுதன், சகானா, நிருஷன், அஷ்வின், சிவானி, சதீஸ் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் Van Orodel family funeral Chapels and Cremotory 11240 N.Kendall drive 33176, இன்று (10.05.2003) சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் 11மணிவரை பார்வைக்காக வைக்கப்பட்டு பினனர் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் 1.30 இற்குத் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*தொடர்பு*
001 305 279 6644
Fax: 001 305 598 9837
Mobile: 001 7864 736340.

(சி-27309)

தகவல்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# கடலில் மீனவர்கள் மீதான கெடுபிடிகள் அகலவில்லை!

## எரிக் சொல்ஹெய்மிடம் தளபதி சூசை தெரிவிப்பு

கிளிநொச்சி,மே10

யுத்தநிறுத்த உடன்பாடு எட்டப்பட்டு ஒன்றரை வருடங்கள் கழிந்த நிலையிலும் கடலில் மீனவர்கள் சுதந்திரமாக தொழில் செய்யமுடியாத நிலைமை இருந்து வருகிறது.

நேற்றுமுன்தினம் வன்னிக்குச் சென்ற நோர்வே சமாதானக் குழுவின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மிடம் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கடலில் இன்னமும் மீன்பிடிக்க சுதந்திரம் இல்லை. மீன் பிடிக்கச் செல்லும் எமது மீனவ மக்கள் மீதும் கடற் படையினர் தொடர்ந்து தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கடற்புலிகளின் நடமாட்டமும் இன்றும் சிக்கலாக உள்ளது. அவர்கள் சுதந்திரமாக நடமாடமுடியாத நிலை தொடர்ந்து காணப்படுகிறது.

யுத்தநிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்து ஒன்றரை வருடங்கள் ஆகின்றன. இந்தக் காலப்பகுதியில் கடற்புலிகள் தமது வழமையான செயற்பாடுகளை நிறுத்தி ஒப்பந்தம் மீறப்படக் கூடாது என்பதற்காக பொறுமையுடன் எத்தனையோ ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளைப் பொறுத்துக்கொண்டு அமைதியைப் பேணி வந்துள்ளனர்.

மேற்கொண்டும் இவ்வாறு இருக்க முடியாது. ஏனெனில் கடற்போராளிகள் சுதந்திரமாக நடமாடவேண்டும். கடற்போராளிகளுக்கு பயிற்சிகள் கொடுக்கவேண்டும். இப்படி பல செயற்பாடுகள் உள்ளன.

அவர்களின் செயற்பாடுகளுக்கு இடையூறு இல்லாமல் உடனடியாக சில ஏற்பாடுகள் வரவேண்டும் - என்றார் சூசை. (ஐ-3)

# யாழ்.மண்ணில் தமிழ் மக்கள் படும் அவஸ்தையை நேரில் போய்ப்பாருங்கள்!

## பிரதமரின் அறிக்கை மீதான விவாதத்தில் அமைச்சர் சேனாரட்ன

கொழும்பு,மே10

யாழ். மண்ணில் தமிழ் மக்கள் படும் அவஸ்தையை நேரில் போய் பார்க்கவேண்டும். சுமார் இரண்டு லட்சம் மக்கள் சொந்த வீடுகளுக்குப் போய் வாழமுடியாமல் இருக்கிறார்கள். அந்த வீடுகளில் இருக்கும் இராணுவத்தினரை விரட்ட அவர்கள் கோரவில்லை. தமது வீடுகளிலிருந்து வெளியேறி இராணுவம் வேறு இடம் செல்ல வேண்டும் என்றே கேட்கின்றனர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இவ்வாறு கூறினார்.

கடந்த புதனன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் சமர்ப்பித்த விசேட அறிக்கை மீதான விவாதத்தில் அமைச்சர் சேனாரட்ன உரையாற்றினார். இந்த விவாதம் நேற்றுமுன்தினம் சபையில் நடைபெற்றது. தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் சேனாரட்ன, சமாதானப் பேச்சுக்கள் ஒருபோதும் முறிவடையாது. அவை தொடர்ந்து நடைபெறும். சமாதானப் பேச்சுக்களில் புலிகள் கட்டாயம் கலந்துகொள்வார்கள் எனக் கூறினார்.


எதிர்க்கட்சிகளின் சார்பில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உரையாற்றினார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயான யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட பின்னர் நாட்டின் இறைமை கொலை செய்யப்பட்டு வருவதாகவும் புலிகள் இயக்கத்துக்கு கடற்படை அதிகாரங்களை வழங்குவதால் இலங்கையின் கடல் பிரதேசத்துக்கும் அவ்வாறே சர்வதேச கடல் பிரதேசத்துக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் எனவும் கதிர்காமர் சொன்னார்.

உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமான சதீஷ் நம்பியாரின் முதலாவது அறிக்கையில் சிக்கல்கள் இருக்காத போதிலும் இரண்டாவது அறிக்கையால் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன எனவும் கதிர்காமர் கூறினார்.(எ)

# இதயத்தின் ஆழத்தில் எழும் நீங்காத நினைவலைகள்

**Death Does Not Take Old**
**But the Ripe**

| 10 வருடங்கள் | | 13 வருடங்கள் |
|---|---|---|
|  | |  |
| வண. பிதா<br>**ஆபரணம் சிங்கராயர் OMI** | | சங். சகோ.<br>**த்ரினிற்றி HFC** |
| 01-04-1943 ← | மலர்வு | → 25-01-1934 |
| 10-05-1993 ← | உதிர்வு | → 29-10-1990 |
| 20-08-1973 ← | குருத்துவம் | |

வெலிக்கடை சிறைவாசம்:
1982 - 1987

நித்திய வான் வீட்டில் களிப்புடன் வாழும் எமது குடும்ப அன்பு சகோதர நெஞ்சங்களின் ஆத்ம சாந்திக்காக நினைவு கூரும்:

சகோதர சகோதரிகள், பெறாமக்கள்,
உறவினர் (உள்நாடு, வெளிநாடு).

(17772)

# விடுவித்த இந்திய மீனவர்கள் மீண்டும் மன்னார் வருகை

## கடும் கடற்கொந்தளிப்பு காரணம்

கடந்த சில நாள்களுக்கு முன்னர் தலைமன்னார் கடலில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு கடந்த திங்கட்கிழமை கற்பிட்டிக் கடலில் வைத்து விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர் 9 பேரில் 8 பேர் கடந்த புதனன்று மன்னாருக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

கடுமையான கடற்கொந்தளிப்பு காரணமாக தாயகம் திரும்ப முடியாதநிலையில் மீண்டும் மன்னாருக்குத் திரும்ப வேண்டி ஏற்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர். எனினும், தம்முடன் மற்றுமொரு படகில் வந்துகொண்டிருந்த அருளானந்தம் என்ற மீனவர் கடற்கொந்தளிப்பின்போது காணாமற்போய்விட்டார் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதுவரை காலமும் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்படும் போது ஸ்ரீலங்கா கடற்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு இந்திய கடல் எல்லையில் வைத்து இந்தியக் கடற்படையினரிடம் கையளிப்பதே வழக்கமாக இருந்தது எனவும் -

இந்தத்தடவை மன்னார் கடற்படையினர் தாம் பிடித்து வைத்திருந்த இந்திய மீனவர்களை கற்பிட்டிக் கடலில் வைத்தே விடுவித்தனர் எனவும் - கூறப்பட்டது.

இதேவேளை - முகம் முற்றாக சேதமடைந்து அழுகிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் மன்னார் சௌத்பார் கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது. இந்தச் சடலம் அடையாளங்காணும் பொருட்டு மன்னார் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-4)

# டிப்ளோமா ஆசிரியர்களுக்கு இழைத்த அநீதி களையப்பட்டது

## ஜோசப் எம்.பி. முயற்சியால்

வடக்கு-கிழக்கு டிப்ளோமா ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி மட்டக்களப்பு மாவட்ட எம்.பியும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவருமான ஜோசப் பரராஜசிங்கத்தின் முயற்சியால் களையப்பட்டது. வடக்கு-கிழக்கு கல்வியியற் கல்லூரிகளில் டிப்ளோமா பட்டம் பெற்ற 168பேருக்கு கடந்த மாதம் வெளிமாவட்டங்களில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் இந்த நியமனங்களை ரத்துச்செய்து அனைவருக்கும் அவர்களது மாவட்டங்களில் நியமனங்கள் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு தலைமையில் நடைபெற்ற ஆலோசனைச் சபைக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

பாடசாலைகள் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சுரநிமல ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் நாணயக்கார ஆகியோரும் கல்வி அமைச்சின் உயரதிகாரிகளும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். டிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு மாற்று மாவட்டங்களில் நியமனம் வழங்கப்பட்டுள்ள அநீதியை ஜோசப் எம்.பி. சுட்டிக்காட்டி அனைவருக்கும் அவர்களது சொந்த வடக்கு-கிழக்கு மாவட்டங்களிலே நியமனம் வழங்கப்படவேண்டும் என்று வற்புறுத்தினார். அதையடுத்தே சொந்த மாவட்டங்களில் நியமனத்துக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(எ)

## கனடாவில் இலங்கை தமிழ் அதிபர்களுக்கு நாளை பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,மே10


2003ஆம் ஆண்டிற்கான தேசிய, முதல்தர அதிபர்களுக்கான தொழில் வாண்மைக் கல்விச் சுற்றுலாவில் கலந்துகொள்வதற்காக இலங்கையிலிருந்து கனடா சென்றுள்ள பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அதிபரும், முன்னாள் நாவற்குழி மகாவித்தியாலய அதிபருமாகிய தமுத்துக்குமாரசுவாமி மற்றும் அவருடன் விஜயஞ்செய்துள்ள ஏனைய 5தமிழ் அதிபர்களுக்கும் கனடா புரோமர் ஸ்தாபனத்தின் ஆதரவில் நாவற்குழி மகாவித்தியாலய முன்னாள் ஆசிரியர்களால் நாளை மாலை ரக்சிடோ சங்கமம் மண்டபத்தில் பாராட்டு விழாவும் ஒன்றுகூடலும் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை முன்னாள் நாவற்குழி மகாவித்தியாலய ஆசிரியர்களான கே.சந்திரசேகரம், சி.ஜே.திலகரத்தினம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். (எ)


உலகப் புகழ்பெற்ற இமாமி தயாரிப்புகள் இப்பொழுது...
யாழ்.நகரிலும்!



இமாமி
நேச்சுரலி ஃபேயர் பேஸ்ட்
அசல் முத்துக்களும்
11 அரிய மூலிகைகள்
கொண்ட
சிவப்பழகு கிறீம்
பாவிப்பதனால்
முகப்பரு அடையாளங்கள் கொண்ட சருமம் என்ற கவலை இனி இல்லை
கண்ணின் கீழ் கருவளையம் இனி இல்லை
முகத்தில் கரும்புள்ளிகள் இனி இல்லை
அழகிய வெண்மையான மிருதுவான சருமம்
6 வாரங்களில்!
வாங்குவோருக்கு Vitmine & Gell இலவசம்
சந்தைப்படுத்துவோர்:
HARCOURTS(PRIVATE)LTD.
No:14, Station Road,Dehiwala.
T.P: 074 - 200063 074 - 200064



ஹிமானி
GOLD TUMERIC CREAM
கஸ்தூரி மஞ்சள்
தங்கத் தூள்
குங்குமப் பூ
அரிய மூலிகைகள்
ஆயுர்வேத் கிறீம்
நச்சுத்தன்மை அகற்றி பொலிவான முகத்தோற்றம்
என்றும் இளமையான சருமம்
மாசுமறுவற்ற சருமம்
தங்கத்தூள் அடங்கிய Yell இலவசம்
யாழ்.முகவர்:
JEGHAN PHARMACY
ஜெகன் பார்மஸி
462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021- 2222194

உ

சிவமயம்

# பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் சித்திரை 28ஆம் நாள் (11.05.2003) ஞாயிற்றுக்கிழமை தசமி திதியும், பூச நட்சத்திரமும் சித்தாமிர்தமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.00மணிமுதல் 12.00 மணிவரை வரும் சுபமுகூர்த்த வேளையில்

**செல்வி தனுஷா**

அவர்களுக்கு

மங்கள நீராட்டு விழா செய்யப் பெரியோரால் நிச்சயித்து மேற்படி வைபவம் இல. 40, காளிகோயில் வீதி, கொழும்பு-13

இந்து பரிபாலன சங்கம் நாவலர் மணிமண்டபத்தில்

நடைபெறவிருப்பதால் அத்தருணம் எமது உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து அதனைத்தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்:
தவில் வித்துவான் கே.சிவகுமார் குடும்பம்
*48,ரஜமல்வத்தை லேன் கொழும்பு-15*
*தொலைபேசி 540412*

மங்கள வாத்தியம்

*தவில் வித்துவான்கள்:*
கலைமாமணி தவில் இளவரசு
திருவளர் புத்தூர்
T.A. கலியமூர்த்தி அவர்கள்
தவில் இளம் சுடர்ஒளி
N.R.S.சுதாகரன் அவர்கள்

*நாதஸ்வர வித்துவான்கள்:*
லயஞான இளவரசன்
M.B.V.சேகர் அவர்கள்
இளம் தென்றல்
S.கணேஸ் அவர்கள்

(C/27839)



# 2ஆவது உலக இந்து மாநாட்டையொட்டிய வலி.மேற்குப் பிரதேச இந்து மக்களின் எழுச்சிப் பெருவிழா

நாளை (11.05.2003) ஞாயிறு காலை 9.00 மணிக்கு சித்தன்கேணி ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் ஆலய முன்றிலில் 2ஆவது உலக இந்து மாநாட்டின் வலி.மேற்கு பிரதேச எழுச்சி விசேட குழுவின் தலைவர் திரு.மு.சவராசா அவர்களின் தலைமையில் நடைபெறும் எழுச்சிப் பெருவிழா ஊர் வலத்திற்கும் நிகழ்ச்சிகளுக்கும் வருகைதந்து சிறப்பித்து பயன்பெறும் வண்ணம் தங்கள் அனைவரையும் அன்புடன் அழைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

விழாவின் நிகழ்ச்சிகள்

★ மங்கள இசையும் ஆலய வழிபாடும்
★ மங்கள விளக்கேற்றல்
★ இறை வணக்கம்
★ கூட்டுப்பிரார்த்தனை
திரு.சு.கணபதிப்பிள்ளை,
*ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் (சங்கீதம்)*

வரவேற்புரை: செல்வி ரஜனி கந்தசாமி
*(கலாசார உத்தியோகத்தர் வலி.மேற்கு)*

ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள்
*(நல்லை குருமகா சந்நிதானம்)*
ஸ்ரீ ராஜ்குமார் சுவாமிகள்
*(ஸ்ரீகாயத்திரி காமகோடி பீடாதிபதி, மீசாலை)*

வாழ்த்துரை: மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்கள்
*(இந்து விவகார அலுவல்கள் அமைச்சர்)*
திரு.செ.பத்மநாதன் அவர்கள்
*(யாழ்.அரச அதிபர், இணைத்தலைவர், 2ஆவது உலக இந்து மாநாடு, யாழ்.பிராந்திய குழு)*

தலைமையுரை: மு.சிவராஜா
*(உதவிப் பிரதேச செயலர் (நிர்வாகம்), வலி.மேற்கு)*

சிறப்புரைகள்: தமிழக அறிஞர், முனைவர்
திரு.இரா.செல்வக்கணபதி அவர்கள்
திருமதி நாச்சியார் செல்வநாயகம்
*(முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*
சிவஸ்ரீ சபா வாசு தேவக்குருக்கள்
*(சிவன் தேவஸ்தானம், சித்தன்கேணி)*

வில்லிசை: திருநாவுக்கரசரின் மகிமை
*(வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரன் ஆலயத்தினர்)*

பிரேரணைகள்: திரு.க.இரத்தினேஸ்வரன் (அதிபர்)
*(வலிகாமம் இந்து ஆலயங்களின் மாநாட்டு குழுத் தலைவர்)*

நன்றியுரை: விழாக்குழுச் செயலாளர்

எழுச்சி ஊர்வலங்கள்

நாளை (11.05.2003) ஞாயிறு காலை 8.00 மணிக்கு அராலி ஆகாயக்குளம் விநாயகர் தேவஸ்தானத்தில் இருந்தும், வட்டுக்கோட்டை அடைக்கலம்தோட்டம் கந்தசுவாமி கோயிலிலிருந்தும், பண்ணாகம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயிலில் இருந்தும், சங்கானை கூடத்து மனோன்மணி அம்மன் ஆலயத்திலிருந்தும் ஆரம்பமாகி சித்தன் ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயிலை அடையவுள்ளது.

விழாவைச் சிறப்புற வாழ்த்துபவர்:
சங்கானை
ஸ்ரீ காளி அம்பாள் தேவஸ்தானம்
திருப்பணிச்சபை. (சி-27840)



# துயர் பகிர்கின்றோம்



திரு.ஆறு.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி,
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
ஆகியோரின் அன்புத் தந்தையார்

**கந்தையா ஆறுமுகம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களது மறைவு எமக்கு கவலையைத் தருகிறது. பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரை இறைஞ்சுகிறோம்.

*கொழும்பு, யாழ்ப்பாணம்.* - K.R.S. நிறுவனம்.


## பிராந்திய மாநாட்டை முன்னிட்டு இடம்பெறும் முக்கிய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே10

இரண்டாவது உலக இந்து மாநாட்டின் யாழ்ப்பாணப் பிராந்திய மாநாட்டை முன்னிட்டு யாழ்குடாநாட்டில் உள்ள ஆலயங்கள், பாடசாலைகள், நிறுவனங்களில் இன்று நடைபெறும் நிகழ்வுகள் பற்றிய விவரம் வருமாறு:-

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் இன்று மங்கள இசை, விளக்கேற்றல், சொற்பொழிவுகள்,பட்டி மண்டபம், திருமுறைக்கச்சேரி, கலைஞர்களான வி.செல்வரட்ணம், எம்.தைரியநாதன், க.சின்னமணி ஆகியோர் இணைந்து வழங்கும் 'சத்தியவான் சாவித்திரி' இசை நாடகமும் இடம் பெறும்.

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று காலை முதல விசேட அபிஷேக ஆராதனைகள் கூட்டுப்பிரார்த்தனை அன்னதானம் அபிராமிபந்தாதி ஓதல்,சமயச் சொற்பொழிவுகள், பட்டிமண்டபம் என்பன இடம்பெறும்.

அகில இலங்கை சைவக்குருமார் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள சைவ ஆகமக் கண்காட்சி இன்று நல்லை ஆதீனத்துக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

சுதுமலை இந்துக பாடசாலையில் இன்று காலை 9 மணிக்கு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள வி.இராசமாணிக்கம், லலிதா ஆகியோர் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவர்.

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் இந்துமாநாடு சமாதான முயற்சிகள் தொடர வேண்டி விசேட பூசைகள், வழி பாடுகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும்

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே10

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் அகில இலங்கை ரீதியாக நடத்தும் 16 வயதிற்கு உட்பட்டோருக்கான 'அஸ்ரா' வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி. (யூனியன் கல்லூரி மைதானம்)

★ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி. (ம-5)

★ ★ ★

மாவீரர் முதன்மைக் காவலர் கஜேசலிங்கம்(அருள்) ஞாபகார்த்தமாக கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு மின்னொளியில் நடைபெறுமாட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

★ இரவு 7 மணி - உடுப்பிட்டி சிவகுமரன் வி.க. எதிர் கரவெட்டி ஸ்பேர்ஸ் வி.க.

★ இரவு 8 மணி - வல்வெட்டி குணசேகரா வி.க. எதிர் புத்தூர் கலைமதி வி.க. .

★ இரவு 9 மணி இமையாணன் மத்திய வி.க எதிர் உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் வி.க. (ம-5)

## திரைப்படக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே10

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு ஒழுங்கு செய்துள்ள திரைப்படக் கருத்தரங்கு தொடர்-02 இன்று சனிக்கிழமை மாலை 4மணிக்கு யாழ்.சிற்றி ஹோலில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் வித்தியாசமான தமிழ்த் திரைப்படங்கள் என்னும் தலைப்பில் எழுத்தாளர் க.சட்டநாதன் கருத்துரை வழங்கவுள்ளார். இதனைத் தொடர்ந்து பல்வேறு கருத்துரைகளும் இடம்பெறவுள்ளன.

திரைப்பட ஆர்வலர்கள் - அனைவரையும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு யாழ்.பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (எ-8)

## இலவச கண்சத்திர சிகிச்சை முகாம்

மல்லாகம் - தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச கண்சத்திர சிகிச்சை முகாம் ஒன்று தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மண்டபத்தில் நாளை காலை 8:30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

மேற்படி மருத்துவ முகாமில் வைத்திய கலாநிதி எஸ். குகதாசன் பங்குபற்றி மருத்துவ ஆலோசனை, சிகிச்சை வழங்குவார். (எ-ரி)


# VACANCIES

Vacancies exist for the following positions for a development project to be undertaken in the near future in locations of the Northern and Eastern Provinces of Sri Lanka.

- ❒ Accountants
- ❒ Assistant Accountants
- ❒ Bookkeepers
- ❒ Information Technology Specialist
- ❒ Local Area Network Administrator
- ❒ Environment Expert
- ❒ Civil Engineer
- ❒ Office Manager
- ❒ Secretary/Computer operator
- ❒ Interpreter/Translater
- ❒ Messengers

All application should have a good command of tamil and English languges and Should have computer literate on microsoft Word and Excel applications

Full or part qualifications with minimam of 3-5 years work experience in the respective field is a per-requisite.

Retired persons may also apply.
Preferance will be given to applicants residing in Northern and Eastern Provinces of SriLanka.

Initial contract for a period of three(3) years with possibility for extensions

Please forward detailed applications giving details of day time contact telephone numbers, email address and expected monthly salary on or before Tuesday 12 th May 2003 to.

Advertisher
Box Number 1886
C/O Uthayan Publications
Jaffna.

(C/27847)



# VACANCIES

Excellent opportunities for young people with good educational background and desire to excel in their chosen careers in an organization established as the Market Leader in Office Automatoin, Communication and IT.

**Marketing Assistants**
Candidates should have successfully completed G.C.E. (Advanced Level) and should have credit passes in English, Mathematics or Science subjects. Good communication skills and IT literacy are required.

Candidates enrolled in any recognized courses in marketing will be an added qualification, will be initially recruited as trainees prior to permanent employment being offered subject to meeting desired performance levels.

**Technicians**
Cadidates should have successfully qualified in the G.C.E.(Advanced Level) and have part qualifications in City &Guilds (U.K) or it's equivalent. Technical skills on IT will be an essential requisite and experience in similar or related industry will be an added qualification.

Attractive terms will be offered to the right candidates.

Please apply by Wednesday 21st May 2003

*To* **Personnel Manager,**
**metropolitan office (pvt) Ltd,**
**85, Braybrooke place,**
**Colombo.**

*Or handover your application to*
**Mr. Sriharan**
**C/o M/s Navahala,**
**200, K.K.S. Road,**
**Jaffna.**

(C/27847)



இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின்
இரண்டாவது உலக இந்து மாநாட்டையொட்டி
யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்கம்
நடத்தும்

# இந்துசமய கலாசார விழா

*இடம்* : யாழ்.ப.நோ.கூ.சங்கக்கேட்போர் கூடம்
*காலம்* : இன்று (2003.05.10) சனிக்கிழமை காலை 10.00 மணி
*தலைவர்* : திரு. சபா.தியாகராஜா
*(இயக்குநர், யாழ்.ப.நோ.கூ.சங்கம்)*

சிறப்பு விருந்தினர் : கௌரவ தி.மகேஸ்வரன் நா.உ..அவர்கள்
*(இந்து சமய விவகார அமைச்சர்)*
திரு.சி.வி.கே.சிவஞானம்
*(தலைவர், யாழ்.ப.நோ.கூ.சங்கம்)*

சிறப்புச் சொற்பொழிவு : முனைவர், இணைப்பேராசிரியர்,
கலாநிதி பா.சுந்தர் *எம்.ஏ.எம்.பில்ட்.பி.எச்.டி*

இன்னிசை, பண்ணிசை, வயலின்சோலோ ஆகியனவும் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்து கலாசார குழு.
யாழ்.ப.நோ.கூ.சங்கம்.

(C/27842)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சிவபூஷணநாகரத்தின சிவக்கொழுந்து விநாயகம்**

மலர்வு: 21.05.1936 உதிர்வு: 21.05.2002

திதி: 10.05.2003

அம்மா ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்!

*இரத்தின இல்லம்,*
*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி.*

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(17777)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இந்து மதத்தின் தொன்மையையும் சிறப்பினையும் எடுத்தியம்பும் வகையில் இங்கு நடைபெறுகின்ற இரண்டாவது உலக இந்து மாநாடு இனிதே சிறக்க இறையருளை வேண்டி எமது நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*நீர்வேலி.* (17758) காமாட்சி அம்பாள் இந்து பரிபாலனசபை.

---

## புதுவை அருள்மிகு ஆலடி முருகன் தேவஸ்தானம்

# சிறப்புற வாழ்த்துகின்றோம்

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு நடத்தும்

**2ஆவது உலக இந்துமாநாடு**

**சிறப்புற வாழ்த்துகின்றோம்.**

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*

*ஆவரங்கால் கிழக்கு.*
*புத்தூர்.* (17769) - பரிபாலனசபையினர்.

---

## யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலய
## பழைய மாணவர் சங்க
## வருடாந்த பொதுக் கூட்டம் - 2003

இடம்: பாடசாலை மண்டபம்
காலம்: *16.05.2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி*
தலைவர்: திரு க.கனகராசா (அதிபர்)

அனைத்து பழைய மாணவர்களையும் தங்கள் அங்கத்துவத்தைப் புதுப்பித்து கூட்டத்துக்குத் தவறாது வருகை தருமாறு மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஜெயக்குமாரன் (செயலாளர்).
(17754)

---

# இதய அஞ்சலி

குரு டீசல் எஞ்சினியர்ஸ் நிறுவனத்தின்
முகாமையாளர்

**அருளம்பலம் அருளானந்தஸ்ரீ**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு
பேரதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும்
அடைகின்றோம்.
அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*180, பருத்தித்துறை வீதி.*
*யாழ்ப்பாணம்.* (17767)
நிர்வாகமும், ஊழியர்களும்
இராசா டீசல் எஞ்சினியர்ஸ்.

---

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி கே.ஆனந்தரட்ணம் அவர்களின் பாசமிகு தந்தையார்

## கந்தையா ஆறுமுகம்

அவர்கள் 08.05.2003 இல் காலமானதையிட்டுத் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (17863)
ஆசிரியர் நலன்புரிக் கழகம்.

---

## மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் சர்வதேசப் பிரிவு

யாழ்ப்பாணம்,மே10

மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் 'சர்வதேசப் பிரிவு' ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்மூலம் இப்பிரதேச வாடிக்கையாளர்கள், பயணிகள் காசோலை வழங்கல், காசாக்கல், நாணயத் தாள்கள் வழங்கல், காசாக்கல் மற்றும் வெஸ்ரேன் யூனியன் பணப் பரிமாற்றம் ஆகிய சேவைகளை பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வதிவோர் மற்றும் வதியாதோர் வெளிநாட்டுக் கணக்கை ஆரம்பித்தல், ஆவணக் கடன்கள், கப்பலேற்றலுக்கான உத்தரவாதம், நம்பிக்கை மாற்றுச் சீட்டுக் கடன்கள், அடமானக் கடன்கள் ஆகிய சேவைகளையும் வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ளமுடியுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-9)

## பெறுமதிமிக்க முத்திரைகள் வந்துசேர்ந்துள்ளன

யாழ்ப்பாணம்,மே10

யாழ்.பிரதம தபாலகத்துக்கு 500 ரூபா மற்றும் 1000 ரூபா பெறுமதி வாய்ந்த முத்திரைகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இன்று தொடக்கம் அவை பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படும் என்று பிரதம தபாலதிபர் எஸ்.இராஜதுரை தெரிவித்துள்ளார்.

(எ-10)

## ஓய்வூதியர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,மே10

நல்லூர் தொகுதி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் ஒன்றுகூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் செ.குஞ்சிதபாதம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பதில் பிரதேச செயலர் எஸ்.இரவீந்திர சர்மா கலந்துகொள்வார்.

(ஐ-9)

---

## மனைப்பொருளியல் பயிற்சி நெறிகள்

★ தையல்,
★ ஐசிங்,
★ Hair Style,
★ Make-up,
★ துணியில் வர்ணமிடல்,
★ கைப்பணி,
★ பூவேலை,
★ சமையற்கலை,
★ ஸ்கிறீன் பிறின்ரிங்

வகுப்புக்கள்

**11.05.2003**

ஞாயிறு காலை 10 மணிக்கு ஆரம்பம்.

*2ஆம் பிரிவு மிக விரைவில்*

**தூரிகை நுண்கலை வளாகம்**
செங்குந்தா வீதி,
கல்வியங்காடு.
(C27830)

---

# இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!

**மணிசாமி**

*யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி.*
*(பழைய லிங்கம் கூல்பார் அருகில்). இல. 54. மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்*
*(வெலிங்டன் சந்தி அருகில்).*

பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை. (17768)

---

# இதய அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் தலைமை முகாமையாளராகக் கடமையாற்றி தற்பொழுது இடமாற்றலாகி யாழ்.பிரதேச செயலகத்தில் தலைமை முகாமையாளராகக் கடமையாற்றும் **திருமதி ராகினி யோகராசா** அவர்களின் பாசமிகு கணவர்

## சின்னத்துரை யோகராசா

(கிராம அலுவலர் - J/78 அத்தியடி)

அவர்களின் திடீர் மறைவு எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் நாம் ஆறுதல் கூறுவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து இதய அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

*பிரதேச செயலகம்.*
*கோப்பாய்.* (17774)
சமுர்த்தி முகாமையாளரும்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும்.

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## ஸ்ரீபாலகிருஷ்ணன் சந்திரபாலதேவி

ஓட்டுமடத்தைச் சேர்ந்த திருமதி ஸ்ரீபாலகிருஷ்ணன் சந்திரபாலதேவி அவர்கள் 08.05.2003 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் நடராஜா (பவளக்கால்) - கனகம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் ஸ்ரீபாலகிருஷ்ணன் (அண்ணாமலை) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"பவளவாசம்"*
*573, மானிப்பாய் வீதி,*
*ஓட்டுமடம்,*
*யாழ்ப்பாணம்.*
*T.P.: 021-222 5761*

தகவல்:
ப.ஸ்ரீபாலகிருஷ்ணன்
(அண்ணாமலை - கணவர்).
(17765)

## திருமதி சுப்பிரமணியம் லஷ்சுமிதேவி

வட்டு.கிழக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் லஷ்சுமிதேவி அவர்கள் நேற்று (09.05.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா மற்றும் சிவபாக்கியம் தம்பதிகளின் அருமை மகளும் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சரவணபவன், புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் லவகுசனின் அருமைத் தாயாரும் பத்மாதேவி, செல்லையா ஆகியோரின் மைத்துனியும் சிவதர்சினி, கஜேந்திரன் (ராஜன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.05.2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சங்கரத்தை வழுக்கையாறு மயானத்தில் பிற்பகல் 4.00மணிக்கு தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டு.கிழக்கு,*
*சித்தன்கேணி.*
(17766)

தகவல்:
வே.சுப்பிரமணியம் (கணவர்),
சு.லவகுசன் (மகன்).

## கந்தையா வைத்தியநாதர்

(முன்னாள் ஆசிரியர், யா/வைத்தீஸ்வராக் கல்லூரி,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

அராலியைப் பிறப்பிடமாகவும் சேச் லேன் கொக்குவிலில் வசித்தவருமாகிய கந்தையா வைத்தியநாதர் 08.05.2003 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் (லேடி ரீச்சர்) அன்புக் கணவரும் சிவபாலன் (கனடா), ஞானலிங்கம் (ஜேர்மனி), சிவசங்கரன் (U.K.), சிவகுமார் (U.K.), சிவனேசன் (மத்திய வங்கி), திருமதி புவிந்தீஸ்வரன் சிவசக்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு அப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.05.2003 திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும்.

*42 3/4, அரிதுசா லேன் (Arethusa Lane),*
*வெள்ளவத்தை,*
*கொழும்பு - 06.* (17772)

தகவல்:
வை.சிவனேசன் (மகன்).
தொ. இல. : 505948

---

We Serve

"கண்ணுக்கு முதலிடம் அளிக்கும்" சேவையாக
மல்லாகம் / தெல்லிப்பழை லயன்ஸ் கழகம்
நடத்தும்

# இலவச கண் பரிசோதனை முகாம்

காலம்: 11.05.2003 (ஞாயிறு) நேரம்: 8.00 மணி (மு.ப.)
இடம்: துர்க்காதேவி தேவஸ்தான நூலக மண்டபம், துர்க்காபுரம், தெல்லிப்பழை

கண் பரிசோதனை மேற்கொள்பவர்
யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எம்.குகதாசன் அவர்கள்.

1. *வலி. வடக்கு மீளக்குடியேறி வாழும் வசதியற்றோருக்கும் முதியோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் "வெசாக்" விடுமுறை நாள்களில் மேற்கொள்ள விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.*
2. *அன்று காலை 9.00 மணிக்கு முன்னர் முகாமிற்கு வருகை தருவோருக்கும் மட்டும் பரிசோதனை செய்யப்படும்.*
3. வசதியற்றோருக்கு கண்ணாடி வில்லை இலவசமாக வழங்கப்படும்.

லயன் பாலாம்பிகை சிறிபாஸ்கரன்
கழகத் தலைவர்
மல்லாகம் / தெல்லிப்பழை.

லயன் எஸ்.எஸ்.தங்கராஜா
மாவட்ட இணைப்பாளர், மாவட்டம் 306 B
(கழகத்தை வழிநடத்துபவர்).

சேவை பிரசுர உதவி: RG
HERO HONDA World No.1

**இரத்தினகோபால்ஸ்**
63, 65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி-27828)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி விற்பனைக்கு

யாழ்நகர மத்தியில் கட்டடமொன றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: காலிங்கன், தட்டாதெருச் சந்தி. T.P.3513 (17751)

## விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய பூச்சி நீக்கப் பட்ட அல்சேஷன் ஜேர்மன் செப்பேட நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. 59, சிவன் புதுவீதி, நல்லூர். (17722)

பாவனையில் உள்ள வூல்சிலிபம் (ஸ்ராண்டட் சைஸ் பிஸ்ரன்) வண்டி லுடனும் இங்கிலண்ட் வில்லியஸ் பம்மும் விற்பனைக்குண்டு தொடர்பு: மா.புலேந்திரன், விஸ்வபத்தனை வீதி, வடலியடைப்பு. (17648)

Sony 14" கலர் T.V.'எரிக்சன்' Handphone (Warranty உண்டு) என்பன விற்பனைக்குண்டு. சனிக் கிழமை மட்டும். தொடர்பு: 169, மருத் துவபீடம் முன்பாக திருநெல்வேலி. (17743)

மல்லாகம் ஸ்ரேசனுக்கு அருகில் 4பரப்புக் காணியுடன் வீடும். தள பாடங்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி பிரேமலா தவக் குமார், மாணிக்கமாளிகை, ஏழாலை மேற்கு, ஏழாலை. (17741)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம்செய்து வேண்டிய நிறையில் பெற்றுக் கொள் ளலாம். பகிரா இன புறொயிலர் குஞ் சுகள் இன்று மாலை விநியோகிக்கப் படும். தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்:ராஜீவ், ஆனைக்கோட் டைச் சந்தி. T.P.No. 3529. 2867 (17749)

Prima Broiler மற்றும் இறைச் சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்கு தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெறுக்கொள்ள லாம். (Electronic) நிறுவை. (நல் லூர் வீடியோ சென்ரர் வரை) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (17609)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் கல்பீட் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: (1) மான்ஸ் பாடசாலை வீதி, டச்சு றோட், உடுவில். 2.சுன்னாகம் மீன் சந்தை முன்பாக. (17569)

## நாய்க்குட்டிகள் விற்பனை

காவலுக்குரிய Dobermann Pincher, Great Dane, Dachund நாய்க்குட்டிகள் 1500/- தொடக்கம் விற்பனைக்குண்டு. தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வரை), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (17690)

## வெளிவாரிப் பட்டப் படிப்பு 2003

மேற்படி பரீட்சைக்கான சந்தைப் படுத்தல் முகாமை, உற்பத்தி முகாமை கணக்காய்வும் நுண்ணாய்வும் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. பிரபல புத்தகசாலைகள் அனைத்திலும் பெற றுக்கொள்ளலாம். (17764)

## புலமைப் பரிசில் பரீட்சை - 2003

மேற்படி புலமைப்பரிசில் பரீட்சைக் கான புதிய பாடத்திட்டத்திற்கான 10 மாதிரி வினாத்தாள்களுடன் விடை களும் உள்ளடக்கியதாக வெளி வந துள்ளது. பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். ஆசிரியை: திருமதி இ.ரகுநாதன், சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப் பாணம். (17763)

## இசைக்குறிப்புகள்

ஓகன், நாதஸ்வரம், வயலின் போன்ற இசைக்கருவிகளுக்கான சினி மாப் பாடல்களின் "இசைக் குறிப் புகள்"என்னும் புத்தகம் (பாகம்-5) வெளிவருகின்றது. தொடர்பு: S.Sறஜீந் திரன், இல.75, கோயில் வீதி, நல் லூர் (கைலாச பிள்ளையார் கோவி லில் இருந்து 300m தெற்கே). T.P. 0777 031293 (17663)

## திருமண சேவை

1970, உத்தரட்டாதி, செவ்வாய் பாவமற்ற, கிரகபாவம் உடைய, M.B.B.S. Doctor அரசசேவையில் இருந்து Relese பெற்று U.K. இல் பயிற்சியில் உள்ளவருக்கு (இடதுகால் வலுக்குறைவு) படித்த, கௌரவ குடும்ப மணமகள் தேவை. துரைவிமலா, இலகுதிருமண சேவை, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (17454)

## மணமகள் தேவை

லண்டன் பிரஜாவுரிமையுள்ள, யாழ்ப் பாணம் இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, 1973இல் பிறந்த (மிருகசீரி டம் 2ஆம் பாதம் கிரகபாவம் 15), கணனிப் பொறியியலாளருக்கு 27 வயதிற்குட்பட்ட, 5'3" இற்குக் குறை யாத உயரமுடைய, நற்பண்புள்ள, அழகிய, பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு: விள.இல. 1882, C/o உதயன். (17654)

## தேவை

கேபிள் தொலைபேசி இணைப்புடன தனியாகவோ அல்லது கடையுடனோ விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்: T.உதயன், பொன்னையா லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில். T.P. 2940 (17646)

## தேவை

நகைக்கடை ஒன்றிற்கு வேலை செய்வதற்கு அனுபவம் உள்ள ஒரு வர் தேவை.

(வயதெல்லை 20-35)

தொடர்பு:-

கிருபா நகை மாளிகை
333A.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No. 0777 111123 (17753)

## தவறிவிட்டது

சுப்பிரமணியம் யோகானந்தா (187/20, ஜெயசமசி மாவத்தை, களுபோவில) என்பவரது தே.அ. அட்டை (742400468V), சாரதி அனு மதிப்பத்திரம் (இல.A-002246202) ஆகியன மருதனார்மடம் பகுதியில் 07-05-2003 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இ.செல்வானந் தன், கந்தையா உபாத்தியாயர் வீதி, கந்தரோடை, சுன்னாகம் என்ற முக வரியில் ஒப்படைத்துதவவும். (17736)

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த ஐயாத்துரை இராசரத்தினம் என்ப வருடைய தேசிய அ.அட்டை (இல.432530442V), விசேடஅ.அ. (இல.0903022492) இரண்டும் உரும் பிராய்ச் சந்திக்கும் உரும்பிராய் கரு ணாகரப் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத் தவர்கள் உரும்பிராய் சந்தியிலுள்ள வசந்தன் கிறீம் ஹவுஸில் ஒப்ப டைத்துதவவும். (17748)

## தேவை

கல்லுடைக்கும் ஆலைக்கு (Crusher) அனுபவமுள்ள

**ஆண் லிகிதர் தேவை.**

ஞாயிற்றுக்கிழமை (11.05.2003) 10.00 மணிக்கு நேரில் வரவும்.

தொடர்பு:
A.இராமச்சந்திரா
லவ்லேன், உடுவில். (17704)



## வாழ்த்தி மகிழ்கின்றோம்



இந்து கலாசார அமைச்சு நடத்தும் 2ஆவது உலக இந்து மாநாடு சிறப்பாக நடைபெறவும் இந்து தர்மம் வளர்ந்து ஓங்கவும் சைவ நீதி உலகெங்கும் நின்று விளங்கவும் வாழ்த்துகின்றோம்.

மேற்படி இந்து மாநாட்டை முன்னிட்டு **வதிரி - காலயன் தோட்டம் அருள்மிகு முத்துக்குமாரசாமி கோயிலில்** இன்று (10.05.2003) சனிக்கிழமை காலை 10 மணியளவில் விசேட பூசைகளும் அபிஷேக ஆராதனைகளும் சிறப்புச் சொற்பொழிவு களும் இடம்பெறவுள்ளன.

(17757) - ஆலய பரிபாலன சபை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இந்து சமயத்தின் பெருமையை எடுத்தியம்பும் இரண்டாவது உலக இந்துமாநாடு இனிதே இடம்பெற தொல்புரம் மத்தி கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்து மாரியம்மனின் அருள்வேண்டி அதன் அமைப்பாளர் களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவர்களது புனிதப் பணியைப் பாராட்டி 02.05.2003 இல் நடைபெற்ற கலாசார விழாவிலும் 06.05.2003 இல் தொல்புரம் மத்திய சனசமூக நிலைய மும் முன்பள்ளியினரும் நடத்திய பிராந்திய மாநாட்டிலும் பெரியார்கள், பேராசிரியர்கள் பாராட்டுரைகள் வழங்கியமை குறிப்பிடத்தக்க அம்சம்.

இம்மாநாடு மேலும் சிறப்புற ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

**தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரியம்மன் தேவஸ்தானமும், மத்திய சனசமூக நிலையமும்.**

(17762)

# தேவை

சவற்காரம், வாசனைப் பவுடர் உற்பத்திக்கு கீழ்வரும் தொழில்களில் ஆற்றலும், அனுபவமும், முகாமைத்துவத் திறமை யும் உள்ளவர் தேவை.

- சவற்கார உற்பத்தி
- வாசனைப் பவுடர்
- அழகுசாதனப் பொருள்கள்

*நேரில் விண்ணப்பிக்கவும்:-*

12.05.2003 திங்கள்,
13.05.2003 செவ்வாய்
(வேலை நேரத்தில்) SLT 8.30a.m. - 5.30p.m.

முகவரி:

**THE PENINSULA GROUP,**
**127/10, Temple Road,**
**Nallur.**

(C27832)

## கண்ணீர் அஞ்சலி



1982ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை எம்முடன் சேவையாற்றிய

**யோகராசா**

அவர்களின் இழப்பு எம்மை நிலைகுலைய வைத்துள்ளது. அன்னாரின் இழப்பால் துயரு றும் மனைவி மற்றும் சகோதரர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

அமரர்
**சி.யோகராசா**
(கிராம உத்தியோகத்தர்)

கிராம உத்தியோகத்தர்கள்,
தென்மராட்சிப் பிரதேச செயலகம்.

(17756)

## கண்ணீர் அஞ்சலி



*கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வடகோவை இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலனசபையின் முன்னாள் தலைவராகப் பணியாற்றியவருமான*

**கந்தையா ஆறுமுகம்**

அவர்கள் இயற்கை எய்திய செய்திகேட்டு ஆழ்ந்த துயரடை கின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மசாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*வடகோவை இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயம்.* - பரிபாலன சபையினர். (17752)

## துயர் பகிர்கின்றோம்



அமரர்
அருளம்பலம் அருளானந்தஜீ



திருமதி
திருஞானசோதி குணேந்திரன்

அருளம்பலம் அருளானந்தஜீ அவர்கள் சுவிற்ஸர்லாந்தில் கால மாகியதும் அன்னாரின் அன்புத் தங்கை திருமதி திருஞானசோதி குணேந்திரன் அவர்கள் நீர்வேலியில் காலமாகியதும் அறிந்து நாம் ஆறாத் துயரடைகின்றோம். இவர்களிருவரதும் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடனும் உற்றார், உறவினர், நண்பர்களுடனும் நாமும் துயரில் பங்குகொள்கின்றோம்.

*இருவரதும் ஆத்மா சாந்தியடைவதாக!*

*திருமதி பராசக்தி சதானந்தன் குடும்பம்,*
*திருமதி ஞானசக்தி சிவராஜா குடும்பம்,*
*திரு. சின்னப்பு தருலேஸ்வரன் குடும்பம்.*

(17744)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 1958 - 02 - 12



மறைவு 2003 - 05 - 08

**அமரர் சின்னத்துரை யோகராசா**

*(கிராம உத்தியோகத்தர் - யா/78 அத்தியடி)*

வயதில் 45 வருடத்தைப் பூர்த்தி செய்தீர்!
அரச சேவையில் 21 வருடத்தைப் பூர்த்தி செய்தீர்!!
கனிவான பார்வை! இனிமையான பேச்சு!!
யாவரையும் ஆறுதல் படுத்தும் செயற்பாடுகள்!
இவை யாவற்றையும் தன்னகத்தே கொண்ட
யோகராசாவின் இறப்பு அவரது குடும்பத்துக்கு
மட்டுமல்ல எம் எல்லோருக்கும் இழப்புத்தான்!
இந்த இனியவரை இவ்வளவு விரைவில்
எம்மில் இருந்து இறைவன் பிரித்து விட்டான்!
அன்னாரை இழந்து தவிக்கும் அன்னாரது
மனைவி மற்றும் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறி
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
*அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*68, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.* (17723)

துயரில் பங்கேற்கும்:
யாழ்ப்பாண மாவட்ட
கிராம உத்தியோகத்தர் சங்கம்.



## இனிச்ச புளியடி முருகன் தேவஸ்தானம்

**2ஆவது உலக இந்து மாநாடு - 2003**

**விசேட பூசை ஆராதனையும் மாகேசுரபூசையும் (அன்னதானம்)**

முருகன் அடியார்களே!

இரண்டாவது உலக இந்துமாநாட்டை முன்னிட்டு அல்லைப்பிட்டியில் இருக்கும் அனைத்து இந்து ஆலயங்கள் சார்பாக அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி முருகன் தேவஸ்தானத்தில் இன்று (10.05.2003 சனிக்கிழமை 10 மணி தொடக்கம் 1 மணி வரை நடைபெறும் விசேட பூசையிலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

*அல்லைப்பிட்டி - 2* (சி-27852)

தர்மகர்த்தா
செ.நடேசப்பிள்ளை.


## 2ஆவது இந்து மாநாட்டையொட்டிய போட்டிகள்

இன்று 2ஆவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு தென் மட்டுவில் வேரற்கேணி கந்சுவாமி கோவிலில் இயங்கும் அறநெறிப் பாடசாலையில் மாணவருக்கான போட்டிகள் நடத்தப்பட்டன. கோலப்போட்டி, தோரணம் செய்யும் போட்டி, மாலைகட்டும் போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகள் 6ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரை நடத்தப்பட்டன. இவர்களில் வெற்றி பெற்ற மாணவருக்கான பரிசில்கள் இன்று இறுதிநாள் சனிக்கிழமை நண்பகல் வழங்கப்படவுள்ளன.

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

தலைவர், பரிபாலனசபை,
*வேரற்கேணி அருள்மிகு கந்தசுவாமி கோவில்*

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வரத்தினம் - சுசி தம்பதிகளின்

*செல்வப் புதல்வி சௌமியா*

தனது முதலாவது பிறந்தினத்தை சுவிஸில் தனது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார். இவரை சீவரத்தினம் அம்மையா, அம்மம்மா சரஸ்வதி, சித்தப்பா அன்ரன் றொபேட், சித்தி மஞ்சுளா, அக்காமார்களான குயின்ரினா, டென்ஸி, அண்ணமாரான டென்சன், தினேஸ் ஆகியோர் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

*அறுகால்மடம், பழம் வீதி,*
*ஆனைக்கோட்டை.* (17797)

றொபேட் சித்தப்பா
குடும்பத்தினர்.


## MATHS CENTRE M.M.V.Road -Nelliady

**O/L DAY CLASS** (பகல் நேர வகுப்பு)

திங்கள் - சனி a.m. 8.00 மணி (ப.நே.)

(முக்கிய அலகுகள் ஆரம்பமாகின்றன)

ஆரம்பம் : 12.05.2003 a.m.8.00 மணி (ப.நே.)

(17761)


## துயர் பகிர்வு

எமது பிரதேச செயலகத்தில் தலைமை சமுர்த்தி முகாமையாளராகக் கடமை புரிந்து தற்போது யாழ்ப்பாணம் பிரதேச செயலக தலைமை சமுர்த்தி முகாமையாளராக கடமை புரியும்

திருமதி ராகினி யோகராசா அவர்களின் அன்புக் கணவர்

**சின்னத்துரை யோகராசா** கி.அ. ஜே/78 - அத்தியடி பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

*நலன்புரிச் சங்கம்*
*பிரதேச செயலகம், கோப்பாய்*

கோப்பாய் பிரதேச செயலரும்
பிரதேசசெயலக அலுவலர்களும்

(C27851)

## கண்ணீர் அஞ்சலி

சரசாலை வடக்கு பதில் கிராம அலுவலராகக் கடமையாற்றி தற்போது யாழ்.அத்தியடி கிராம அலுவலராகக் கடமை புரிந்த

**சின்னத்துரை யோகராசா**

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் சமர்ப்பிப்பதுடன் ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

(C27851)

- சரசாலை வடக்கு மக்கள்.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கந்தையா (கிட்டினர்)

(இளைப்பாறிய ஆசிரியர்)

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், 104/7, அத்தியடி குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கந்தையா (கிட்டினர்-இளைப்பாறிய ஆசிரியர்) நேற்று (09.05.2003) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

*104/2 அத்தியடி குறுக்கு வீதி யாழ்ப்பாணம்*

க.இராஜரட்ணம் (மருமகன்)

## இந்தியக் கலைஞர்களின் இசை நிகழ்வு

இரண்டாவது உலக இந்து மாநாட்டில் கலந்துகொள்வதற்காக தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ள தவில் வித்துவான் காரை துவாரமங்களம் ஏ.கே.பழனிவேல் குழுவினரின் நடைலய நாட்டியாஞ்சலி நிகழ்வு இன்று சனிக்கிழமை இரவு 8 மணி முதல் நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. (ம-3)

## வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல்

எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் யாழ்.நகரப் பகுதியில் உள்ள அனைத்து வியாபார நிலையங்களையும் மூடி ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

தொடர்ந்து மூன்று தினங்கள் அதாவது 14ஆம், 15ஆம், 16ஆம் திகதிகள் விடுமுறை தினங்களாக வருவதால் முன்பு அறிவித்தல் விடுத்தமைக்கு அமைய முதலிரு தினங்களும் வியாபார நிலையங்களை மூடி இறுதிநாளான 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டும் அவற்றைத் திறந்து வியாபாரத்தில் ஈடுபடுமாறும் வணிகர் கழகம் வர்த்தகர்களுக்கு அறிவித்துள்ளது. (ம-10)


## DIPLOMA IN PSYCHOLOGY

HSCMF - 5 ஆவது பிரிவிற்கான கற்கைநெறிக்கு A/L தரத்திற்கு மேல் கற்றுத் தேறியவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரியுள்ளது. விண்ணப்பம் செய்வோர் முத்திரையுடன் சுயமுகவரி இடப்பட்டதும் 50/- ஆன காசுக் கட்டளையும் உடன் அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

Director, HSCMF, Navaly North, Manipay.
Clo. Date: 14.05.2003

(17792)

## லஷ்சுமி சினிமா
இணுவில்

மாதவன் -ஸ்நேகா
வையாபுரி. மணிவண்ணன். சார்லி மற்றும் பலர் நடிப்பில்

**என்னவளே**

தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே)

(17791)

## லிபேட்டி
அச்சுவேலி



விஜய், ஸ்நேகா நடித்த

**வசீகரா...** (ரீலை)

காட்சி நேரம் :
11.00, 3.00, 7.00 (புதிய நேரம்)

## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
குதூகல ஆரம்பம்
இளையதளபதி விஜய், மீராஜஸ்மின்



**புதிய கீதை**

10.30, 2.30, 6.30, 9.30

(C/27626)

## நிறைஞ்சனாஸ்

சிவாஜி, பத்மினி நடித்த

**தில்லானா மோகனாம்பாள்**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.00 (பு.நே.)
China Strike Force ஜக்சன்

## நாகம்ஸ் சுன்னாகம்

மக்கள் திலகம் M.G.R, ஜெயலலிதா, நம்பியார் மற்றும் பலர் நடித்த

**இரகசிய பொலிஸ் 115**

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)
11ஆம் திகதிமுதல்

**அரசு**

(17719)



"நாளைய எதிர்காலத்தை இன்றே தீர்மானியுங்கள்."

Hello Student's


**2003 A/L** பரீட்சையை முடித்துவிட்ட உங்களுக்கு, ஒரு பொன்னான வாய்ப்பு.

கணக்கியல் உலகில் அங்கீகரிக்கப்பட்ட aat கற்கை நெறியூடாக நீங்களும் ஒரு உயர் தொழில்சார் வல்லுநராகி சிறந்த வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ள நாம் வழிகாட்டுகின்றோம்.

**Our special offer for A/L 2003 Student's**

**100% FREE**

(A/L பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கும் வரை)



மேலதிக விபரங்களுக்கு:- **CAREER.COM INSTITUTE**

*No.79, MAIN ST., JAFFNA*

அலுவலக நேரம்: தினமும் காலை 9.00 a.m. - 2.00 p.m.

Note: தங்கள் பதிவுகள் 25.05.2003 முன்னர் மேற்கொள்ளவும்.

சொற்பொழிவுரைகள் தமிழ், ஆங்கில மொழி மூலம் நடைபெறும்.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி இராஜநாயகம்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், நந்தாவில்லை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி இராஜநாயகம் 04.05.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.05.2003வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 5 மணியளவில் கொழும்பு கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*628/5, கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.* (17778)

க.பஞ்சாட்சரம்
(சகோதரன்)

## அந்தோனிப்பிள்ளை மேரிகிறேஸ்

யாழ்ப்பாணம், பாங்ஷால் வீதியை வதிவிடமாகக் கொண்ட அந்தோனிப்பிள்ளை மேரிகிறேஸ் 07.05.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - தங்கராசம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பேபி, மெக்டலின், அரியராசா, அருள்நாயகம், யோகநாயகம் மற்றும் அரியநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் புளோறா, காலஞ்சென்ற பேடினன் மற்றும் கிறேசியன், பிறீடா, றீற்றா, அன்ரன், றெஜி, றாயு, புளொறின், சறோ ஆகியோரின் பாசமிகு தாயாரும் கபிரியேல், விமலா, டலசி, இராசநாயகம், மரியநாயகம், கிளாடிஸ், ஸ்ரெலா, அஜந், றிச்மண்ட் செல்வம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.05.2003) சனிக்கிழமை பிற்பகல் 3.30 (பு.நே) மணியளவில் 118, பாங்ஷால் வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் இருந்து திருப்பலிக்காக புனித யாகப்பர் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு, நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*118, பாங்ஷால் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (17782)

G.புளோறா மரியா
(மகள்)

## திருமதி கிருஷ்ணசாமி பரமேஸ்வரி

பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி கிருஷ்ணசாமி பரமேஸ்வரி அவர்கள் நேற்று(09-05-2003)வெள்ளிக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் பருத்தித்துறை லக்ஷ்மி பவான் முன்னாள் உரிமையாளர் காலஞ்சென்ற து.கிருஷ்ணசாமி அவர்களின் அன்பு மனைவியும் கந்தையா சுப்பிரமணியம் அவர்களின் அன்புச் சகோதரியும் தங்கவேலாயுதம் (ஜேர்மனி),கண்ணன் மகேஸ்வரி(ஜேர்மனி), சிங்காரவேலு(நோர்வே), கணேசலிங்கம்(சுவிஸ்), பாலேந்திரன்(லண்டன்), இராசேந்திரம்(ஜேர்மனி), குலேந்திரன் (லண்டன்), ரவீந்திரன், ஜெயலட்சுமி, மங்களேஸ்வரி(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கண்ணன்(ஜேர்மனி), புஸ்பரோகினி(நோர்வே), ஜெயகுலராணி, கிருபாலினி, உமா(ஜேர்மனி), சுதாயினி(லண்டன்) சுஜதாயினி, உருத்திரகுமார்(கனடா), காந்தாதேவி(ஜேர்மனி), மா.கணேசலிங்கம் (லக்ஷ்மி பல்பொருள் வாணிபம், பிரதான வீதி, பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-05-2003) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*பருத்தித்துறை.* (C/27849)

கி.ரவீந்திரன்
(மகன் - குட்டி)

## சின்னத்துரை யோகராசா

**(கிராம சேவையாளர், J/78 அத்தியடி, யாழ்.பிரதேச செயலகம்)**

மந்துவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.40,2ஆம் ஒழுங்கை,பலாலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை யோகராசா (முன்னாள் கிராம சேவையாளர், J/303,சாவகச்சேரி வடக்கு,சாவகச்சேரி பிரதேச செயலகம்) நேற்றுமுன்தினம்(08.05.2003)வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தெய்வானை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சிவயோகம் (யோகம்மா) ஆகியோரின் அன்பு மருமகனும் ராகினியின்(சமுர்த்தி தலைமை முகாமையாளர், யாழ்.பிரதேச செயலகம்) அன்புக் கணவரும் கந்தசாமி (லிகிதர், களுபோவில ஆஸ்பத்திரி,கொழும்பு),காலஞ்சென்ற பராசக்தி மற்றும் கந்தராசா, வசந்தா, திலகவதி, துரைராணி(ஆசிரியை), புனிதவதி, புஸ்பவதி, வனஜா, சுஜீவா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், சுதாகரன் மற்றும் ஜெயந்தன் ஆகியோரின் சகலனும் நாகராசா(ஆய்வுகூட உதவியாளர்,யாழ்.போதனா வைத்தியசாலை),தனீஸ்வரன்,அனுரதன்,பவளராணி,ரஞ்சித்(ஆசிரியர்,புனித பத்திரிசியார் கல்லூரி,யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற தர்மதாஸ் மற்றும் ரஜந்தன், ரஞ்சினி, ரஞ்சன், ரசிகன், நேசமலர், ராஜினி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (10.05.2003)சனிக்கிழமை புதிய நேரம் 2.30 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்.

*இல.40,2ஆம் ஒழுங்கை,*
*பலாலி வீதி, யாழ்ப்பாணம்.* (17794)

க.ரஞ்சித் (மைத்துனர்)

## திருமதி தைரியநாதர் பாக்கியம் (அம்மாச்சி)

கொழும்புத்துறையைச் சேர்ந்த திருமதி தைரியநாதர் பாக்கியம் 07.05.2003 புதன்கிழமை தனது 91ஆவது வயதில் காலமாகிவிட்டார்.

அன்னார் அமரத்துவமடைந்தவர்களான சூசை - ஆரோக்கியம் அம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் அமரர் ஆசீர்வாதம் தைரியநாதரின் அன்பு மனைவியும் லூர்த்தம்மா, அமரர் மேரிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் இராஜேந்திரம், பேதுரு, ஆகியோரின் மைத்துனியும் திரேசம்மா, மரியநாயகம், அமரர் செல்வரெட்னம், அழகு ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் பொன்னுத்துரை, புஸ்பம்,அமரர் இராணி, லூர்த்தம்மா, பெலிஸ்ரீனா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று(10.05.2003)சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று,புனித செபமாலை மாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூதவுடல் நல்லடக்கத்திற்காக அர்ச் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*இல.16,சென்மேரிஸ் 2ஆம் ஒழுங்கை,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.* (17798)

திரேசம்மா
(அம்மாரத்தினம்)
குடும்பத்தினர்.

# மிலிந்த மொறகொடவிடம் இருந்து அபிவிருத்தி லொத்தர் சபை பறிப்பு

கொழும்பு,மே10

பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொடவின் கீழ் இயங்கி வந்த அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியிட்டுள்ளார் என இலங்கை வானொலி அறிவித்தது.

அமைச்சர் மிலிந்த மொறகொடவின் அதிகாரத்தின் கீழ் அபிவிருத்தி லொத்தர் சபை இயங்கி வந்தது. இந்த அபிவிருத்திச் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலுக்கு அதிருப்தி தெரிவித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதிக்கு நேற்று கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில், தன்னுடன் ஆலோசனை நடத்தாமல் எந்தவோர் அமைச்சுக்களினதும் பொறுப்புக்களை அல்லது அதிகாரங்களை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளுக்குத் தான் சம்மதிக்கப்போவதில்லை என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை - ஜனாதிபதியின் வர்த்தமானி அச்சிடும் பணி நேற்று இரவு அரச அச்சுக்கூடத்தில் இடம்பெற்றதாகவும் -

அச்சமயம் அங்கு கைகலப்பு இடம்பெற்றதாகவும் - ஒரு செய்தி தெரிவித்தது. (ம-3-4)

## கண்காணிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகக் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதே முக்கியம்.

*கேள்வி:-* படைகளின் உயர் பாதுகாப்பு வலயத்தை மாற்றி அமைப்பதானால் புலிகளும் தமது நிலைகளை மாற்றியமைக்கவேண்டும என்று நம்பியார் கூறியிருப்பது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

*பதில்:-* இதே போன்ற ஒரு யோசனையைத்தான் வடமுனைத் தளபதி பொன்சேகாவும் இவ்வாண்டின் ஆரம்பத்தில் முன்வைத்தார். இது விடயத்தில் இரு தரப்பினரதும் படையினரின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுக்க முடியாது. இருப்பினும், ஏதாவது ஒரு சரிபார்க்கும் வழிமுறை என்பது நல்லதுதான். இதுபற்றிக் கண்காணிப்புக் குழுத் தலைவரும் கூறியுள்ளார். இதில் கண்காணிப்பு என்ற விடயம் அனுகூலமானதாகவே இருக்கும்.

*கேள்வி:-* புலிகளின் ஆட்லறிகள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பன்னாட்டுக் கண்காணிப்பின்கீழ் வைக்கப்படவேண்டும் என நம்பியார் குறிப்பிட்டு இருப்பது சாத்தியமான யோசனையா? இதற்கு புலிகள் சம்மதிப்பார்களா?

*பதில்:-* எனக்கு இதுபற்றி எதுவும் தெரியாது. நீங்கள் இதுபற்றிப் புலிகளிடமே கேட்கவேண்டும். ஆனால், யாழ்ப்பாணத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தின் பரப்பளவு இராணுவ த்துக்கு அங்குள்ள அச்சுறுத்தல் என்ற விடயத்துடன் நேரடியாகத் தொடர்புடையது என நினைக்கிறேன். உயர் பாதுகாப்பு வலயம் என்பது புலிகளிடம் உள்ள நீண்டதூரம் சென்று தாக்கவல்ல ஆயுதங்களுடன் நேரடியாகத் தொடர்புடைய வி யம். அதனால்தான் இந்த வலயங்கள் இவ்வளவு பெரியனவாக உளளன - என்றார்.


## இணுவையம்பதியில் மாபெரும் இந்து கலாசார விழா

2ஆவது உலக இந்து மாநாட்டை ஒட்டி இணுவில் கந்தசுவாமி கோயில் இளம் தொண்டர் சபையால் நடத்தப்பட்டுவரும் கலாசார விழாவில் இன்று இரவு 8மணிக்கு வயலின் வித்துவான் உ.இராதாகிருஷ்ணனின் வயலின் சோலோ கச்சேரி இடம்பெறும்.

இளம் தொண்டர் சபை,
இணுவில் கந்தசுவாமி கோயில்.

(சி-27853)



## IPAS
### Institute of Professional Accounting Studies

புதிய பிரிவிற்கான விரிவுரைகள் June மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகின்றன.

★ **Chartered Accountancy - Jan. - 2004**
(English/Tamil Medium விரிவுரைகள்)
★ **aat - December 2003**
(English/Tamil Medium விரிவுரைகள்)
★ **CIMA (U.K.) Nov. 2003**

*Further details:*
199, Main street, Jaffna.
Contact Mobile : 0777 563294, 0777 - 563292
0777 270452 0777 - 164966

Office Hour
9.00a.m.- 5.00p.m.

(சி-27841)



## விக்னா கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம்

# O/L DAY CLASS
பிரிவு 6

★ பிரிவு 5இற்கு அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
★ பிரிவு 6இற்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
★ இதுவே இறுதிப்பிரிவாகும் சொற்ப அனுமதிகளே உண்டு.
★ தூர இடத்து மாணவர்களுக்கான விடுதி வசதிகள் செய்துதரப்படும்.

(17780) - நிர்வாகிகள்.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## சிவயோகசுவாமி நினைவுப் பேருரை

*காலம்* : 2003.05.12 திங்கட்கிழமை பிற்பகல் 3மணி
*இடம்* : யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம்

*நினைவுப் பேருரையை நிகழ்த்துபவர்:*
கலாநிதி கணபதி பாஸ்கரன்
*(M.A.,M.Phil.,Phd.)*
*(பேராசிரியரும் பணிப்பாளரும் தத்துவமையம், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு)*

*தலைப்பு:* சைவசித்தாந்தமும் இந்திய தத்துவ முறைகளும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-27843) - துணைவேந்தர்.


## விளையாட்டுப் போட்டி

சாவகச்சேரி,மே10

செஞ்சிலுவைச் சங்கத்தின் சாவகச்சேரிக் கிளையினால் நடத்தப்பட்டுவரும் சிறுவர் பாடசாலை விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை நண்பகல் ஒரு மணிமுதல் பாடசாலை முன்றிலில் இடம்பெறவுள்ளது.(ம-3)

## ஜப்பான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரபாகரனை நான் கிளிநொச்சியில் சந்தித்துப் பேசியபோது நினைவுப் பரிசொன்றை அவர் எனக்கு வழங்கினார். அந்தப் பரிசு தமிழரின் தனித்தேசிய இனத்துவத்தை வலியுறுத்தி வழங்கப்பட்டதே தவிர தனிநாட்டை வலியுறுத்தி வழங்கப்படவில்லை. அவருடன் நடந்த பேச்சுக்களில் அவர் தனிநாடு பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. தனது மக்கள் பற்றியே அவர் மிகுந்த கரிசனையுடன் பேசினார் - என்றார்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்த பின்னர் வடக்கு - கிழக்கு மக்கள் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளனர். நான் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் செய்த போது அதை நேரில் கண்டேன்.

ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்ணோடு நோக்கினால் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியாது முரண்படும் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வுகண்டு அது களையப்படவேண்டும்

சர்வதேச சமூகம், இன்று இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளை உன்னிப்பாகக் கவனித்து வருகிறது என்றும் அகாஷி கூறினார்.

தாம் இந்தியத் தலைவர்களைச் சந்தித்து ஜப்பானில் நடைபெறவுள்ள மநாட்டில் இந்தியா பங்கு கொள்ள வேண்டும் என வலியுறுத்தி உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ம-4)

## அமைதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலாத் தொடர்புகளை வலுப்படுத்துவது குறித்து மேலும் கவனம் செலுத்தப்படும்.

எண்ணாயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் மாலைதீவில் பணிபுரிகின்றார்கள். இது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

சிலர் எமது நாட்டு சட்டதிட்டங்களை மீறுகிறார்கள் என்பதைத் தெரிவிப்பதில் கவலையடைகிறேன். 23 இலங்கையர்கள் இதுவரை பாரதூரமான குற்றச்செயல்களுடன் தொடர்பட்டுள்ளனர். இவர்களில் 19 பேர் போதைவஸ்துக் கடத்தல் குற்றச்சாட்டுக்குள்ளானார்கள்.

போதைப் பொருள் கடத்தலே மாலைதீவு இன்று எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாகும். இவற்றை ஒழிக்கக் கடும் நடவடிக்கை எடுக்க எமக்கு நேரிட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான முதலீடுகள் குறித்தும் கூடிய கவனம் செலுத்தப்படும் - என்றார்.


## SUBRA
சித்தன்கேணி

ENGLISH SPOKEN with GRAMMAR

*by:* BRITTO

ஆரம்பம்:14.05.2003 (புதன்)
காலை 7.00 மணி
பேச்சுச் சிங்களம்
திரு. லீலாகிருஷ்ணன்
14.05.2003 காலை 8.00 மணி

(சி-27793)



## நிரு கல்வி நிலையம்
கோண்டாவில்
**O/L DAY CLASS**
பிரிவு II
ஆரம்பம்: 13.05.2003
திங்கள் 7 மணி

(17730)



## A/L 2005
## கணக்கீடு
புதிய பிரிவு ஆரம்பம்
Sat., Sun. 5 p.m.
Mr.தவா,*B.com(hons)[Acc. spl.]*
**SHAMROCK**
யாழ்.ஈச்சமோட்டை வீதி.

(017742)


## சதீஷ் நம்பியாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்படவேண்டிய அரசியல் விடயம் என்பதை அவரே ஒப்புக்கொள்கிறார்.

அதற்குமேல் அறிக்கை எதை எப்படிச்சொல்லி என்ன பயன். இந்த அறிக்கையை குப்பைத்தொட்டியில் போடவேண்டும்.

- இப்படி விநாயகமூர்த்தி கூறினார்.

ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா கருத்துத் தெரிவிக்கையில்:-

சதீஷ் நம்பியாரின் அறிக்கை யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல ஒரு பக்கச்சார்பாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை.

சதீஷ் நம்பியார் இந்தியாவின் முன்னாள் இராணுவ உயர் அதிகாரி. இன்றும் அவருக்கு அரச மட்டத்திலும் இராணுவ உயர் மட்டத்திலும் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன.

இந்தியா தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் வெவ்வேறாக நோக்குகிறது. அந்த நோக்கிலேயே பேச்சுகளில் காயை நகர்த்திவருகிறது. இந்தியாவின் இந்த நிலைப்பாட்டில் இருந்து பார்த்தால் சதீஷ் நம்பியாரின் இந்த மாதிரியான அறிக்கை எதிர்பார்க்கப்பட்டதுதான். இதை ஏற்றுக்கொள்ளமுடியாது; கண்டிக்கப்பட வேண்டியது - என்றார்.

தமிழ்க் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்பியும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவருமான ஜோசப் பரராஜசிங்கம் பின்வருமாறு கூறினார்:-

சதீஷ் நம்பியார் தன்னுடைய அறிக்கை, அரசு என்ன நினைக்கிறது, படையினர் என்ன நினைக்கிறார்கள், புலிகள் என்ன நினைக்கிறார்கள், தென்னிலங்கை மக்கள் என்ன நினைக்கிறார்கள், தமிழ் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றெல்லாம் எடுத்துக் கூறுகிறார். அது எப்படி, இது எப்படி என்றெல்லாம் சொல்கிறார்கள். இதை அவர்கள் ஏற்கமாட்டார்கள், அதை அவர்கள் ஏற்கமாட்டார்கள் என்றெல்லாம் தெரிவிக்கிறார்.

மற்றப்படி, எதைத் தான் செய்ய வேண்டும் என்று திட்டவட்டமாக அவர் அறிக்கையில் எந்த இடத்திலும் கூற வில்லை. அதாவது, எந்த ஒரு சிபாரிசையும் அவர் செய்யவில்லை. ஆகவே, இது உப்புச்செப்பற்ற வழவழா அறிக்கை யாருக்கு இது தேவை? - இப்படி அவர் கூறினார்.

வவுனியா மாவட்ட எம்.பியும் புளொட் தலைவருமான த.சித்தார்த்தனிடம் கருத்துக்கேட்டோம்.

அவர் அறிக்கையைப் படித்துவிட்டுச் சொல்வதாகத் தெரிவித்தார். காத்திருந்தோம் கிடைக்கவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடமும் கருத்துக் கேட்டோம். அவர் நழுவல் தந்திரத்தைக் கையாண்டார், விட்டுவிட்டோம்.

## எமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொண்டுள்ளார்.

எமது நாட்டின் கள நிலைவரங்களை நன்கு அறிந்த யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான ஆலோசனைகளை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளார். அதேபோல், கடற்படைத் தளபதி தமது ஆலோசனைகளை எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளார். இவற்றை அரசு நிராகரித்து விட்டது - இவ்வாறு சரத் அமுனுகம மேலும் கூறினார்.


## கொம்பியூட்டர் ரைப் செற்றேர்ஸ், பேஜ்மேக்கர், கிராபிக் டிசைனேர்ஸ்

கணனியில் பக்கவடிவமைப்பு (Page Making), தட்டெழுத்து (Type Setting) மற்றும் கிராபிக் டிசைனிங் (Graphic Designing) செய்வதில் அனுபவம் உள்ளோருக்கு உடனடி வேலை வாய்ப்புகள்.

இத்துறையில் இணைந்து பயிற்சிபெற்றுத் தொழில் தகைமை பெறவிரும்புவோருக்கும் அரிய சந்தர்ப்பம்.

சுயவிவரங்கள், கல்வித்தகைமை மற்றும் நற்சான்றுப் பத்திரங்களுடன் அலுவலக நேரத்தில் உதயன் பணிமனைக்கு நேரில் வருகைதரவும். (இருபாலாரும் சேர்த்துக்கொள்ளப்படுவர்)

மனித வள அலுவலர்,
உதயன் நிறுவனம்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## மணமகள் தேவை

1972, கார்த்திகை 1இல் செவ்வாய் கிரகபாவம் 52 BENG, M.Sc. (Advanced Manufacturing Systems) - University of London, University kingston Work - Delarue PLO (Lanka) Security & currency Printers Joint Venture Central Bank, Salary SLR 80,000/- இற்கு மேல் பெறும் உயர் உத்தியோக மணமகனுக்கு அழகான மணப்பெண் டாக்டர், கணக்காளர், பொறியியலாளர் தரத்தில் தேவை.

தொடர்பு:
பொ.பாலச்சந்திரன் (இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்)
202, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
காருப் பணம் எதுவும் இல்லை. சந்திக்கும் நேரம்: காலை 8-11 வரை.

(17615)


## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை குலசிங்கம்

**உரிமையாளர், குலம் கிறீம் ஹவுஸ் (மானிப்பாய், யாழ்ப்பாணம்)**

ஊர்காவற்றுறை, புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குலசிங்கம் கடந்த 07.05.03 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சிவயோகம் தம்பதியினரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், சுந்தரம்பாள் (பிரான்ஸ்), சறோ (வவுனியா), ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேந்திரராஜா (பிரான்ஸ்), நடனசிகாமணி (ராசா - வவுனியா) மற்றும் மாணிக்கராஜா (ஆஸ்திரேலியா), சிவராஜா (மல்லிகா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம், மானிப்பாய்), மல்லிகாதேவி (மானிப்பாய்), நவரட்ணராஜா (ஆஸ்திரேலியா), நித்தியலக்ஸ்மி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், உதயணன், துவாரகா, ரேகா, துவாரகன், தயாபரி, காயத்திரி, கீதாஞ்சன், பிரியங்கா, விதுசன், முகுந்தராஜா, மோகனராஜா, பிரிதிவராஜா, மைதிலி, தெய்வீகராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், மோகனபிரகாஸ், சிவாஜினி, கஸ்தூரி, லக்ஸி, துளசி ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 10.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*ஆலடிச்சந்தி,*
*மானிப்பாய்.*

(C/27850)

தகவல்:
கு.செல்வராணி,
(மனைவி)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.